பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 03 செவ்வாய்க்கிழமை (18.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 354

# சர்வதேசத்தின் கண்காணிப்புடன் தமிழரின் அபிலாஷைகளை அறிய சர்வஜன வாக்கெடுப்பு நடத்துக!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, நவம்பர் 18

தமிழர்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகள் என்னவென்று அறியும் பொருட்டு சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பில் வடக்கு - கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றில் அரசிடம் வேண்டுகோள் விடுத்தது.

அந்த வாக்கெடுப்பின் மூலம் மக்கள் வழங்கும் ஆணையை ஏற்க தமிழ்க் கூட்டமைப்புத் தயாராக இருக்கிறது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் அறிவித்தார்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் 25ஆம் திகதி மீண்டும் கடையடைப்பு

சென்னை, நவ. 18

இலங்கையில் போரை நிறுத்தவேண்டும் எனக் கோரி தமிழகத்தில் எதிர்வரும 25 ஆம் திகதி மீண்டும் கடையடைப்பு நடத்தப்படவிருக்கின்றது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

கல்விச் சுடரில்

க.பொ.த.ப(சா) பரீட்சை

வரலாறு 1

## விடுதலைப் புலிகளை தடைசெய்வது குறித்து அரசு பரிசீலனை செய்கிறது

### பிரதமர் ரத்னசிறி தகவல்

கொழும்பு, நவ. 18

விடுதலைப் புலிகளை இலங்கையில் தடைசெய்து குறித்து பரிசீலிக்கிறோம்;கவனம் செலுத்தி வருகின்றோம். மிகக் குறுகிய காலத்தில் அது சம்பந்தமாக முடிவுசெய்து விடுவோம்.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமரத்தின இவ்வாறு தெரிவித்தார்.

தமது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே (18 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு களமுனையில் கடுஞ்சமர் 38 இராணுவத்தினர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். முன்னரங்க நிலைகளான முகமாலை, கிளாலி, கண்டல், இயக்கச்சி மற்றும் வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் ஆகிய பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்ற கடுஞ்சமரில் இராணுவத்தினர் 38 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 109 பேர் வரை படுகாயமடைந்தனர் என்று விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

''கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.10 மணியளவில் விமானப்படையினரின் ஜெற் விமானங்கள், எம். ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்கள், ஆட்லறி மற்றும் பல்குழல் எறிகணைகள், கவச வாகனங்களின் கடும் பிறகளச் சூட்டாதரவுகளுடன் அரச படைகள் (17 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தையும் கைப்பற்றிவிட்டதாக இராணுவத் தளபதி நேற்று அறிவிப்பு

கொழும்பு, நவ. 18

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த மாங்குளம், பனிச்சங்கேணி ஆகிய இடங்களை நேற்றுப் பிற்பகல் படையினர் மீட்டு விட்டனர் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத்பொன்சேகா அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அந்தப் பகுதியில் ஆரம்பமாகி நடைபெற்ற கடும் மோதலின் பின்னர் அந்தப் பகுதிகள் படையினர் வசமாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை-

கிளிநொச்சிக்குத் தெற்காக உள்ள மாங்குளம் பகுதிக்குள் திங்கட்கிழமை இராணுவத்தினர் நுழைந்தனர் என்று பாதுகாப்பு பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல நேற்று நண்பகல் தெரிவித்திருந்தார்.

இராணுவத்தின் விசேட (18 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதியின் சேவைக்காலம் நீடிப்பு

கொழும்பு, நவ.18

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன் சேகாவின் சேவைக்காலத்தை மேலும் ஒரு வருடத்தால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நீடித்துள்ளார் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் இவரது சேவைக் காலம் மேலும் (18 ஆம் பக்கம் பார்க்க)

## விடு. சிறுத்தைகளின் மாணவர் பிரிவு இன்று மாபெரும் எழுச்சிப் பேரணி

சென்னை, நவ.18

இலங்கையில் கொளுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் போரை நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாணவர் பிரிவு எழுச்சிப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

இப்பேரணி இன்று செவ்வாய்க்கிழமை சென்னையில் உள்ள மன்றோ சிலையில் இருந்து சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லம் வரை நடத்தப்படவுள்ளது.

இதில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.(18 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் இராணுவ பலத்தை இழந்துள்ளனர் எனக் கூறுவது தவறு

### இக்பால் அத்தாஸ் பி.பி.ஸிக்குப் பேட்டி

கொழும்பு, நவ. 18

''விடுதலைப் புலிகளைக் குறைத்து மதிப்பிட்டு, அவர்கள் இராணுவ பலத்தை இழந்துவிட்டார்கள் என்று கூறுவது முற்றிலும் தவறானது. ஆனால், பூநகரியைப் புலிகள் இழந்ததில், அவர்கள் பின்னடைவை எதிர்கொள்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.''

- இவ்வாறு பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் நேற்றிரவு பி.பிஸிக்குத் தெரிவித்திருந்தார்.

இம்மாதம் 27 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் வரவிருக்கின்ற நிலையில் புலிகளின் பின்னடைவு மிக முக்கியமானதாகும் - என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் பி.பி.ஸிக்கு மேலும் கூறியவை வருமாறு:-

''கடந்த சனிக்கிழமை இராணுவத்தினர் பூநகரியைச் கைப்பற்றினார்கள். (18 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி வெற்றியை கொண்டாடும் ஓட்டோ ஊர்வலம் நேற்று யாழ்.நகரில்

யாழ்ப்பாணம், நவ. 18

பூநகரி மற்றும் ஏ-32 பாதையை படையினர் மீட்ட வெற்றியைக் கொண்டாடும் முகமாக யாழ்.நகரில் நேற்று ஓட்டோக்களின் ஊர்வலம் நடைபெற்றது.

'பாண்ட்' வாத்திய இசை முழங்க வெடிகள் பெரும் ஒலிகிளப்ப ஊர்வலம் நகரின் பல பகுதிகள் ஊடாகவும் சென்றது.

வெற்றியைக் கொண்டாடும் கோஷங்கள்ஒலி பெருக்கிமூலம் ஒலிக்க, நகரவீதிகளில் இந்த ஓட்டோ பவனி வலம் வந்தது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தனில் தொடர் ஷெல் மழை நேற்று ஒருவர் பலி; 6பேர் காயம்!

வவுனியா, நவ.18

கிளிநொச்சி, பரந்தன் சந்திப்பகுதியை நோக்கி நேற்றுப் பிற்பகல் 2.35 மணி முதல் இராணுவத்தினர் சரமாரியான ஆட்லறித் தாக்குதல்களை மேற்கொண்டனர் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குலினால் சிவிலியன் ஒருவர் உயிரிழந்தார். 6 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இதில் இருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்திய (18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
## அறிவித்தல்

மேற்படி அமைப்பில் இதுவரை அங்கத்துவத்தை உறுதிப்படுத் தாதவர்கள் உடனடியாக அங்கத்துவத்தை உறுதிப்படுத்தவும். பதிவிற்காக கட்டணம் எதுவும் அறவிடப்படவில்லை என்பதை அறியத்தருகிறோம்.
மேலதிக விபரங்கட்கு காரியாலத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ஆனைப்பந்தி. -செயலாளர்-

## சேவை நலன் பாராட்டு

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் 02.08.1972ஆம் திகதி முதல் பணிபுரிந்து இன்று (18.11.2008) செவ்வாய்க்கிழமையுடன் ஓய்வுபெறும்

**க.சந்திரபோஸ்**
(களஞ்சிய முகாமையாளர்)

அவர்களின் சேவையை கௌரவிப்பதுடன் நல்லாரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அங்கத்தவர்கள், பணியாளர்கள், பணிப்பாளர்கள்,
தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து).
புகையிரதநிலைய வீதி, மல்லாகம். (79950)

## CHANGE WE NEED

ICT,GIT உயர்கற்கை நெறி, பொதுப் பரீட்சைகளுக்கு தோற்றுபவர்களுக்காக உங்கள்
திரு.S.செல்வநாயகம்
அவர்களின் புத்தம் புதிய படைப்பு

**சமகால தகவல் தொழில்நுட்பம்**
**Contemporary Information Technology**

அதிரடி விலை
150 ரூபா
(இச்சலுகை 30.11.2008 வரை மட்டுமே)

**கிடைக்கும் இடங்கள்**

1) பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
2) அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
3) ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
4) துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம்.
5) சிவன் ஸ்ரோர்ஸ், பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.

'அனைவருக்கும் சமகால தகவல் தொழில்நுட்பம்'

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 13 ★ 08 ★ 1928
மறைவு 19 ★ 10 ★ 2008

**அமரர் இளையதம்பி கதிர்காமலிங்கம் (J.P.)**
(மல்லாகம் பழம்பதி தேவஸ்தான முன்னாள் தலைவர்)

19.10.2008 அன்று இறைபதம் அடைந்த மல்லாகம் பழம் பதி தேவஸ்தான முன்னாள் தலைவரும் ஓய்வுபெற்ற பிறப்பு இறப்பு மாவட்டப் பதிவாளருமான உயர்திரு.இளையதம்பி கதிர்காம லிங்கம் (சமாதான நீதிவான்) அவர்களது மறைவினால் துயருற் றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மல்லாகம் பழம்பதி தேவஸ்தான சபை நிர்வாகமும், அடியார்களும்.

## மரண அறிவித்தல்
### திருமதி இரத்தினபூபதி இராசரத்தினம்

அளவெட்டியை பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதி, யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினபூபதி இராசரத்தினம் நேற்று (17.11.2008) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொ.இராசரத்தினம் (பதிவு வைத்திய அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் சிவதாசன் (கொழும்பு), சிவமலர், சிவரஞ்சினி (கனடா), புவிராஜ் (கொழும்பு) ஆகியோ ரின் அருமைத் தாயாரும், வசந்தகுமாரி, செந்தில்நாதன், இராம தாஸ் (கனடா), சிவகருணா ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிராமி, மயூரன், நிவேதிதா, பிரியதர்சன், சாமினன், கோகு லன், சிந்துஜா, வைசாலி, லிங்கராஜ ஆகியோரின் அருமைப் போத் தியாரும், யசுஷனின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்க ளான நடராசா, நவரத்தினம், நாகராசா மற்றும் இராமநாதன், இலங் கநாதன், தனலட்சுமி (கனடா), சீதாலட்சுமி (கனடா), செல்வ விநாயகரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2008) செவ் வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்ப யன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி. சிவமலர் செந்தில்நாதன் (மகள்).
566, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (79944)

## பட்டமளிப்புக்குச் செல்லும் மாணவர்களுக்கு இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், நவ.18

கொழும்பில் நடைபெறவுள்ள உயர் தொழில் நுட்ப நிறுவனப் பட்டமளிப்பு விழாவுக்குச் செல்லவிருக்கும் மாணவர்களை பயண ஆயத்தங்களுடன் இன்று காலை 7.30 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு நிறுவனத்தின் பணிப்பாளர் கே.கதிர்மலை கேட்டுள்ளார்.

நாளை புதன்கிழமை கப்பல் சேவை இடம்பெறாத காரணத்தால் சகல மாணவர் களையும் இன்று வருமாறு அவர் அறிவித் துள்ளார். (1)

## மீசாலையில் திருட்டு; மேலும் இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.18

மீசாலை வங்களா வீதியில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக மேலும் இருவரை சந்தேகத்தின் பேரில் சாவகச் சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரியாலை, ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த கந்தசாமி கிருபாகரன், நாவற்குளி சந்தியைச் சேர்ந்த செல்லையா செல் வேந்திரன் ஆகிய இருவருமே கைது செய் யப்பட்டவர்களாவர்.

இந்த இருவரையும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் ஆஜர் செய்த போது இவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டார்.

இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர் புடைய நபர் ஒருவர் கடந்த வாரம் பொலி ஸாரால் கைது செய்யப்பட்ட தற்போது விளக்கமறியலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-207)

## சமூகவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் கருத்தரங்குத் தொடரில், நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கலைப்பீடக் கட்டடத் தொகுதி யில் அரசறிவியல்துறை சிரேஷ்ட விரிவு ரையாளர் கே.ரி.கணேசலிங்கம் உரை யாற்றவிருக்கிறார்.

''உலகளாவிய நிதி நெருக்கடியும் பன்னாட்டு அரசியலில் அதன் பாதிப்பும்'' என்னும் தலைப்பில் அவரின் உரை இடம் பெறுகின்றது. (1-25)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் கிளை மேற்பார்வையாளர் சங்கரப்பிள்ளை சந்திரசூடி அவர்களின் அன்புத் தாயார்

**சங்கரப்பிள்ளை நாகரத்தினம்**

அவர்கள் காலமாகியதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பொதுமுகாமையாளர், பணியாளர்கள்,
வலி.கிழக்கு தென்பகுதி, ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி.

## துயர் பகிர்கிறோம்



சண்டிலிப்பாய் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபையின் செயலாளரான திரு சே.பத்மநாதனின் அன்புத் துணைவியார்

**திருமதி ப.சந்திராவதி**
(இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்)

அவர்களின் பிரிவால் துயரத்துள் ஆழ்ந்து இருக்கும் குடும்பத்தினருடன் எமது கவலைகளை பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூசணி அம்பாளை பிரார்த் தித்து பணிந்து நிற்கும்.

சண்டிலிப்பாய். தர்மகர்த்தா சபையினர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா கனகலிங்கம் (உரிமையாளர், சிங்கப்பூர் போசனசாலை)



புங்குடுதீவு, மூன்றாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, அரசடி அம் மன் வீதியைப் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கனகலிங்கம் நேற்று (17.11.2008) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர்அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி. (79950)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சிந்தாமணி வெற்றிவேல்



தேவரையாளி, கந்தன் இல்லத்தை பிறப் பிடமாகவும் செல்வபதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிந்தாமணி வெற்றிவேல் நேற்று (17.11.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் - சிவப்பர் தம்பதிகளின் புதல்வியும் கார்த்திகேசு - செல்லம் தம்பதிகளின் மருமகளும் கா.வெற்றிவேலுவின் பாசமிகு மனைவியும் ஸ்ரீதர் (ஸ்ரீராம் எலற்றிக்கல் வேக்ஸ்), ஸ்ரீஜனி, ஸ்ரீவனஜா ஆகியோரின் அன்புத்தாயாரும் அமிர்தாரணி, மா.அறிவழகன் (சமுர்த்தி வலய உதவி முகாமையாளர்), மு.ஸ்ரீதர் ஆகியோரின் மாமியாரும் செல்வி அனுசியா (இரண்டாம் வருட நுண்கலைப்பீட மாணவி, யாழ். பல்கலைக் கழகம்), ஸ்ரீவஸ்தன், ஸ்ரீராம், அஜிதா, அபிதா, கிருசாந், தனுசா ஆகியோரின் பேர்த்தியாரும் தெ.செல்வமலர், யோகேந்திரன், கஜேந்திரமலர், கஜேந்திரன், நவமலர், காலஞ் சென்ற செல்வேந்திரன் ஆகியோரின் சிறியதாயாரும் சி.தெய் வேந்திரம், யோ.சுமதி, வி.சற்குணராசா, க.விஜிதா ஆகியோரின் மாமியாரும் க.சின்னமணி, வ.அமிர்தலிங்கம், வே.தங்கம்மா, வ.சிவராசா, காலஞ்சென்றவர்களான க.மரகதம், ந.வள்ளிப் பிள்ளை, வ.கந்தசாமி, வ.தர்மன் (இளைப்பாறிய பொலீஸ் உத்தி யோகத்தர்) வ.காந்தி ஆகியோரின் இளைய சகோதரியும் சி.நட ராசா, அ.இரத்தினேஸ்வரி, க.மீனாட்சியம்மா, கா.வேலாயுதம் காலஞ்சென்றவர்களான வ.கணபதிப்பிள்ளை ஆ.கந்தவனம், த.நாகரத்தினம், சி.மனோன்மணி, கா.முத்துச்சாமி, கா.தம்பிராசா (கணேசன்), கா.ஆழ்வாப்பிள்ளை (சந்திரஸ்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான மு.தங்கரத்தினம், த.இராச மணி, ஆ.சிவதங்கமலர் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.11.2008) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பங்குவேம்படி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

''செல்வபதி''
நெல்லியடி வடக்கு, தேவரையாளி.
தொ.பே.இல. 0779122936
தகவல்: வெ.ஸ்ரீதர் (மகன்- ஸ்ரீராம் எலற்றிக்கல் வேக்ஸ்).

### சுப்பிரமணியம் தம்பாபிள்ளை



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வதி விடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தம் பாபிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்) லண்டனில் 15.11.2008 சனிக் கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவக் கொழுந்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரோஜினிதேவி யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருமதி பூ.பொன்னம் மாவின் அன்புச் சகோதரனும் பசுபதி, ஞானசம்பந்தன், கிரு பானந்தன், திலகவதி, நளாயினி, சுந்தரலிங்கம், ஆகியோரின் அன்புத் தந்தையும் அமிர்தா,அனந்தி, சுதாசினி, புஸ்பலிங்கம், ஏகேஸ்வரன், சுபத்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2008) புதன் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.Pasupathy
26 Lapstone gardens
Kenton, Harrow
Middlesex
HA 3 OE D
020 8907 1677 (79942)

தகவல்: மனைவி
895, நாவலர் வீதி, அரியாலை.

### திருமதி சரஸ்வதி கந்தையா



மாவிட்டபுரம், பளையைப் பிறப்பிடமாகவும் அந்தோனியார் கோவில் வீதி, சூளானை, சுன் னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கந்தையா (17.11.2008) நேற்று திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், ஸ்கந்தராசா(சிறி, மின்சார நிலை யம், சுன்னாகம்), கிருஷ்ணவேணி, லோகேஸ் வரன்(அக்கிரகோ, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயா ரும், சுசித்திரா, அன்ரன் அமலதாஸ்(புடைவை வியாபாரி, சுன் னாகம்), பத்மினி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியாந்தி (பல்கலைக்கழகம், மட்டக்களப்பு), வினோதினி, சஞ்சீவன் (மயூரன்), விதுர்ஷன் (யூனியன் கல்லூரி மாணவர்கள்) , வைசி காமேரி கெலண்ட், போள்டன்பிளேயர், ரிலக்சன் ஆகியோரின் பேர்த்தியும் தம்புவின் அன்புச் சகோதரியும், மங்களேஸ்வரியின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2008) செவ் வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 10மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

சூளானை, சுன்னாகம்
தகவல்: பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசியல் தீர்வு என்பது என்ன மந்திரக் கோல் மாயமா...?

பூநகரியை இராணுவத்தினர் தம்வசமாக்கிய அன்று, கடந்த சனிக்கிழமையன்று, ஜனாதிபதி அலரிமாளிகையில் இருந்து விசேட செய்தி ஒன்றைத் தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்தார்; உரையாற்றினார். போர்க் களத்தில் வெற்றியை ஈட்டிக்கொடுத்த படையினரைப் பாராட்டுவ தற்காகவே அந்த விசேட ஒலிபரப்பு நிகழ்த்தப்பட்டது.

அதன் ஓர் அம்சமாக, ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டுப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு தமிழீழ விடுத லைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு மீண்டும் அழைப்பு விடுவதையும் ஜனாதிபதி சேர்த்துக் கொண்டார்.

அதற்கு ஒருசில நாள்களுக்கு முன்னர் இந்தியா சென்றிருந்தவேளை, புதுடில்லியில் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாக - வெட்டு ஒன்று துண்டு இரண்டாக - கூறியிருந்தார். அவரது அந்தக் கருத்து தமிழகத்தின் ஏழு கோடி மக்களின் கோரிக்கையை - இலங்கையில் போர்நிறுத்தம் கொண்டுவர வேண்டும் என்ற அனைத்துத் தமிழகக் கட்சிகளின் தீர்மானத்தை- கருத்தை- தூக்கி வீசுவது போன்று, அவர்களை அவமதிப்பது போன்று இருந்தது. இந்திய அரசின் ஊடாக- மறை முகமாக - எனக்குப் புத்திசொல்ல நீங்கள் யார் என்று தமிழகத் தலைவர்களை அலட்சியம் செய்வதாக, உதாசீனப் படுத்துவதாக, அவமரியாதை செய்வதாக அமைந்திருந்தது. அதன் தாக்கமே, ராஜபக்ஷ சொல்வதை நம்பி ஏமாறாதீர்கள் என்று முதல்வர் கருணாநிதி மத்திய அரசின் கவனத்தை ஈர்த்து தமிழகச் சட்டசபையில் நிகழ்த்திய உரை.

விடுதலைப்புலிகளோடு போர்நிறுத்தம் இல்லை என்ற அழுங்குப்பிடியைத் தாம் கைவிடப்போவதில்லை என்பதனை ஜனாதிபதி மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வருகிறார். வார இறுதியில் புத்திஜீவிகளுடன் நடத்திய சந்திப்பிலும் தமது நிலைப்பாட்டை இடித்து உரைத்திருக்கிறார் அவர்.

வடக்கு - கிழக்கில் இப்போதுள்ள நிலைகளின் பிரகாரம் போர்நிறுத்த உடன்படிக்கை அவசியமே இல்லை என்று விளக்கியிருக்கிறார் அவர்களுக்கு. போர்நிறுத்தம் தற்போது பலவீனமடைந்திருக்கும் விடுதலைப்புலிகளை மீண்டும் பலமுள்ளவர்கள் ஆக்குவதற்கே உதவும் என்று வியாக்கியானமும் வேறு கொடுத்துள்ளார்.

அது ஒருபுறமிருக்க -

போரின் இறுதிக்கட்டம் நெருங்கியிருப்பதால் அடுத்த நடவடிக்கையாகத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு யோசனையை மிக விரைவில் முன்வைப் பதற்குத் தாம் கூடுதல் கவனம் செலுத்துவதாகவும் ஜனாதிபதி புத்திஜீவிகளிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இத்தனைக்கும், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்குரிய ஏற்புடைத்தான, அர்த்தபுஷ்டியான அரிச்சுவடிகூட எழுதப்படவில்லை. அனைத்துக் கட்சிக்குழு என்ற தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாத ஒன்றின் ஊடாகத் தமக்கு வாய்ப்பான ஒரு தீர்வு யோசனையை முன்வைத்து அதனைத் தமிழர் மீது திணிப்பதே மஹிந்தரின் உள்ளார்ந்த சூழ்ச்சி நிறைந்த எண்ணம்.

அருகில் உள்ள பிராந்திய வல்லரசான இந்தியாவுடன் பகைத்துவிடக்கூடாது என்பதற்காக, அதனோடு இருபத்தொரு வருடங்களுக்கு முன்னர் செய்த ஒப்பந்தத்தின் பிரகாரம் எழுதப்பட்ட 13ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை கையில் எடுத்துப் பிடித்திருக்கிறார் ஜனாதிபதி. அலிபாபாவின் அற்புத விளக்காக அதைக் காட்டித் தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றிக் காலத்தைப் போக்கலாம் என்பது அவரின் உள்ளார்ந்த நோக்கம்.

13ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தம், தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றுவதை எட்டிக்கூடப் பார்க்கவில்லை என்று தெரிவித்து அவர்களால் நிராகரிக்கப்பட்ட ஒன்று.

தமிழர்களுக்கு எதனையோ கிள்ளித் தெளிப்பது போன்று, 13ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்கப்போவதாக, இந்தியாவைத் திருப்திப்படுத்துவது போன்று செயற்படுவதிலேயே ஜனாதிபதி முனைப்பாக உள்ளார்.

அனைத்துக் கட்சிக் குழுவுக்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட அரசியல் நிபுணர்களின் சிபார்சுகள் சில வற்றை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை என்ற செய்திகள் கசிந்திருப்பதும் இங்கு கருத்திற்கொள்ளப் படவேண்டிய ஒன்று.

13ஆவது சட்டத்திருத்தம், முருக்கம் செத்தலுக்கு வர்ணப் புடவை கட்டிவிட்டது போன்ற ஒரு பம்மாத்து என் பது பல வருடங்களுக்கு முன்னரே தமிழ் மக்களிடையே பேசப்பட்ட ஒன்று. 13ஆவது சட்டத் திருத்தத்தைத் தமி ழர்கள் முழுமையாக நிராகரித்தார்கள் என்பதனைத் தெரிந்து கொண்டும், அதன் அடிப்படையில் அரசியல் தீர்வு இயற்றப் படுவதாக ஜனாதிபதி மஹிந்த கூறுவது காலத்தை வாங் கும் உத்தியே; தமது பதவிக்காலத்தை நிலைநிறுத்தும் புத்தியே.

தமிழர் தரப்பின் நிலைப்பாடு ஒருபுறமிருக்க -

13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று ஒரு தீர்வை உருவாக்குவதற்குத் தெற்கின் சிங்களப் பேரினவாதம் ஜனாதிபதியை அனுமதிக்குமா என்பது பிரதான கேள்வி.

13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பது என்பது பிரச்சினைக்குத் துணைபோகும் என்று தேசப்பற்றுள்ள தேசிய நிலையம் சங்கு ஊதுவதற்குத் தொடங்கிவிட்டது.

அரசாங்கம் அதனை நாடிச் செயற்படுத்துவதில் ஆர்வம் காட்டுமானால், தெற்கில் நெருக்கடி நிலையை எதிர்கொள்ள நேரிடும் என்று அந்தப் பேரினவாத அமைப்பு எச்சரித் துள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்பது பிரிவினையைத் தோற்கடிப்பதாகும். அப்படியிருக்க 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் செல்வதென்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. பிரிவினைவாதத்துக்கு ஊக்கமளிக்கும் சதித்திட்டத்தைத் தோற்கடிப்பதற்கு, தேசப்பற்றுள்ள ஒவ்வொருவரும் ஒன்றுபட வேண்டும் என்று ஆதரவு திரட்டவும் ஆரம்பித்துள்ளது அந்த அமைப்பு.

இத்தகைய இடக்குமுடக்கான பின்னணியில், தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை ஓரளவுக்கேனும் நிறைவேற்றக்கூடிய அரசிய்ல் தீர்வைத்தானும் மஹிந்த அரசால் ஒப்பேற்ற முடியுமா என்பது நூறு வீதம் சந்தேகத்துக்கு உரியது.

நிலைமை இவ்வாறிருக்க, அரசியல் தீர்வு என்ற எட்டாக் கொப்பை ஜனாதிபதி மஹிந்தவினால் பிடிக்க முடியுமா? மாயாஜாலம்காட்டி ஓர் உருப்படியான அரசியல் தீர்வைக் கொண்டுவருவது என்பது வெற்றுப்பேச்சே. அதில் சந்தேகம் ஏதுவும் இல்லை! அரசியல் தீர்வு என்பது, என்ன, மந்திரக் கோல் மாயம் என்ற நினைப்பா?

# யுத்தநிறுத்த உடன்படிக்கையின் மூலம் மீண்டும் புலிகளைப் பலமடையச் செய்வதா?

## கேள்வி எழுப்புகிறார் ஜனாதிபதி மஹிந்த



கொழும்பு, நவ.18

நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தற்போதுள்ள நிலைமைகளின் படி போர் நிறுத்த உடன்படிக்கை அவசியமற்றது எனத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிக மோசமாகப் பலவீனமடைந்திருக்கும் விடுதலைப் புலிகளை மீண்டுமொரு தடவை பலமடையச் செய்ய உதவ வேண்டுமா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவ்வாறனதொரு நிலைமை ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை யார் ஏற்றுக்கொள்வது என்றும் ஜனாதிபதி வினா எழுப்பியுள்ளார்.

தமது புதுடில்லி விஜயம் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் புத்திஜீவிகளுடனான சந்திப்பொன்றின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை மாலைஅலரிமாளிகையில்இந்தச்சந்திப்பு இடம் பெற்றது.

விடுதலைப் புலிகள் தோல்வியின் இறுதிக் கட்டத்துக்கு வந்துள்ள நிலையில் அவர்கள் மீண்டெழுவதற்கு வாய்ப்பளிக்க முடியாது. தமிழகத்தின் போர்நிறுத்தம் தொடர்பான அழுத்தம் குறித்து இந்தியப் பிரதமர் தன்னிடம் எடுத்துக்கூறிய போது அந்த யோசனையை தான் முற்றாக நிராகரித்ததாகவும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

யுத்தத்தில் இறுதிக் கட்டம் நெருங்கியிருப்பதால் அடுத்த நடவடிக்கையாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு யோசனையை முன்வைக்கும் விடயத்தில் தான் கூடுதல் அக்கறை காட்டி வருவதாகவும் கூடிய விரைவில் அரசியல் தீர்வு யோசனையை முன்வைக்க விருப்பதாகவும் ஜனாபதிபதி மகிந்தராஜபக்ஷ புத்திஜீவிகளுடனான சந்திப்பின்போது எடுத்துரைத்தார்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துப் பேச்சுவார்த்தைக்கு வருவார்களானால் அவர்களுடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறிய ஜனாதிபதி இதற்குப் போர் நிறுத்தம் அவசியமில்லையெனவும் குறிப்பிட்டார். (50)

# வெளிநாட்டில் இருந்து திரும்பியவர் உட்பட இருவரைக் காணவில்லை என முறைப்பாடு

வலி.வடக்கு, நவ.18

வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவரையும், வெளிநாடு ஒன்றில் இருந்து கொழும்பு திரும்பிய இளைஞர் ஒருவரையும் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கதிரவேலு ரஜிதன் (வயது-25) என்ற குடும்பஸ்தரைக் கடந்த 12 ஆம் திகதி முதல் காணவில்லையென முறையிடப்பட்டுள்ளது. வாகன ஓட்டுனரான இவர் புத்தூருக்குப் போவதாகக் கூறிச்சென்றதாகவும் பின்னர் வீடுதிரும்பவில்லையெனவும் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

டோகாவில் தொழில் புரிந்துவிட்டு கொழும்பு திரும்பித் தனியார் விடுதியொன்றில் தங்கியிருந்த யாழ்.இளைஞரைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி பழைய சோனகத் தெரு, கொழும்பு என்னும் முகவரியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த வேளையிலேயே இவர் காணாமற் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் கிழக்கு காளிகோவிலடி என்னும் இடத்தைச் சேர்ந்த கந்தையா ஜெயசீலன் (வயது - 26) என்பவரே காணாமற் போனதாக முறைப்பாட்டில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-86-25)

# 'தகவல்துளிர்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி கணினி மாணவர் ஒன்றியத்தின் 'தகவல் துளிர்' நூல் வெளியீடு இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு கல்லூரி விவேகானந்தர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது

கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்ளவிருக்கிறார். (1)

# அமைச்சர்கள் செலுத்தும் வருமான வரி எவ்வளவு?

## கணக்குக் கேட்கிறார் ஐ.தே.கட்சி எம்.பி.

கொழும்பு, நவ. 18

அரச தரப்பு அமைச்சர்கள் செலுத்தும் வருமான வரி பற்றிய விவரத்தை நாட்டுக்குத் தெரிவிக்குமாறு ஐ.தே. கட்சி எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த வருடம் தாமும் அவரது மனைவியும் சேர்ந்து வருமான வரியாக 25 லட்சம் ரூபாவை செலுத்தினர் என்றும் கிரியெல்ல சொன்னார். நேற்றைய வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரச அமைச்சர்கள் எவரும் முறைப்படி வருமான வரி செலுத்துபவர்கள் அல்லர்.

குறிப்பாக பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகேயிற்கு நாவலப்பிட்டியில் 3 வீடுகளும் கட்டுநாயக்காவில் ஒரு வீடும் உள்ளன.

இவை போக மத்திய மாகாணத்தில் அவருக்குச் சொந்தமா 20 மதுபானசாலைகள் உள்ளன. இன்னும் பல வர்த்தக நிலையங்கள் உள்ளன.

இவை ஒன்றுக்கேனும் அவர் வருமான வரி செலுத்துவதில்லை. நானும் எனது மனைவியும் கடந்த வருடம் 25 லட்சம் ரூபாவை வருமான வரியாகச் செலுத்தினோம். நாம் சட்டப்படி செயற்படுகிறோம்.

அரச அமைச்சர்கள் இவ்வரியை முறையாகச் செலுத்துகிறார்களா என்று இந்நாட்டு மக்கள் அறிய வேண்டும். ஆகவே, அவர்களின் வருமான வரி விவரங்களை அரசு வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (அ-சி)

# வன்னியிலிருந்து கோதீவு வந்த 11 பேர் குருநகர் அகதி முகாமில்

வன்னியிலிருந்து கோதீவுக்குப் படகுகளில் வந்து சேர்ந்த மேலும் 11 பேர் குருநகரில் முன்னர் மேல் நீதிமன்றம் இயங்கிய கட்டடத்தில் உள்ள அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி வந்த இவர்களை அப்பகுதிப் படையினர் கைது செய்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த 11 பேரையும் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

குருநகரில், முன்னர் மேல் நீதிமன்றம் இங்கிய கட்டடத்தில் உள்ள அகதிகள் முகாமில் யாழ். பிரதேச செயலரின் பொறுப்பில் தங்கவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

உருத்திரபுரம், சிவன் வீதியைச் சேர்ந்த நான்கு ஆண்கள், மூன்று பெண்கள் , நான்று சிறுவர்கள் ஆகியோரே அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (50-207)

# மாணவர்கள் இருவர் உட்பட மூவர் கடத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடு

வலி.வடக்கு, நவ.18

பாடசாலை மாணவர்கள் இருவர் உட்பட மூவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதாக மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி நண்பகல் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த ஆயுததாரிகள் இருவர் சின்னக்கோவிலடி, கட்டப்பிராயைச் சேர்ந்த பாடசாலை மாணவனான கணேசமூர்த்தி நிசாந் (வயது-19) என்பவரைக் கடத்திச் சென்றதாக அவரது பெற்றோர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை 15 ஆம் திகதி அதிகாலை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆயுததாரிகள் நல்லூர் அரசடி வீதியில்9 ஆவது ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் வசித்த பாடசாலை மாணவனான நவரட்ணம் ஜீவிதன் (வயது-17) என்பவரை வீட்டுக் கதவுகளை உடைத்து உள்நுழைந்து கடத்திச் சென்றதாக முறையிடப்பட்டுள்ளது.

இதே தினத்தில் சின்னக்கோயிலடி, கட்டப்பிராயைச் சேர்ந்த 'மெக்கானிக்' தொழில் புரியும் குடும்பஸ்தரான கந்தையா ரங்கநாதன் (வயது - 37) என்பவரை ஆயுதமுனையில் கடத்திச் சென்றதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (50-86-25)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 04 | 19.11.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | மு.இ.09.38வரை |
| நட்சத்திரம்: | ஆயிலியம் |
| | பி.இ.02.03 வரை |
| [illegible] | 04.39 - 06.09 |
| [illegible] | 12.09 - 01.39 |

# தொழில் வாய்ப்பு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.18

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையால் பயிற்றுவிக்கப்பட்டவர்களுக்கு தொழில்வாய்ப்பு பெற்றுக் கொடுப்பது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இல 103/1 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்டப் பணிமனையில் நடைபெறவுள்ளது. மேற்படி பயிற்சி அதிகார சபையில் கற்று வெளியேறிய அனைத்துத் துறை மாண வர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப் பாளர் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் யுவராஜ் விளாசல்; இரண்டாவது போட்டியிலும் இந்தியா வெற்றி!

இந்தியாவின் மத்திய பிரதேசத்தின் இந்தூரில் இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் இந்திய அணி 54 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன்மூலம் 7 போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலையில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் டோனி முதலில் தமது அணி துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார்.

இதன்படி களமிறங்கிய இந்திய அணி ஆரம்பத்தில் எதிரணியின் பந்துவீச்சை எதிர்கொள்ளமுடியாமல் தடுமாறியது. எனினும் பின்னர் யுவராஜ் சிங்கின் அபார சதத்தினாலும், கம்பீரின் அரைச் சதத்தின் உதவியுடனும் அவ் அணி சரிவிலிருந்து மீண்டது.

அணியின் ஆரம்ப வீரர்களாக கௌதம் கம்பீரும், விரேந்தர் ஷேவாக்கும் களமிறங்கினர். அணி 4 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது விரேந்தர் ஷேவாக் 1 ஓட்டத்துடன் புரோட்டின் பந்துவீச்சில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ரெய்னாவும் 4 ஓட்டங்களுடன் புரோட்டின் பந்தில் படேலிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

பின்னர் களம்புகுந்த ரோகித் சர்மாவும் 3 ஓட்டங்களைப் பெற்று புரோட்டின் வேகத்தில் ஷாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான கட்டத்தில் இருந்தது.

எனினும் மறுமுனையில் நிதானமாக துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த கம்பீருடன் இணைந்துகொண்டார் யுவராஜ்சிங். இருவரும் நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடி அணியை சரிவில்இருந்து மீட்டனர். இவர்கள் இணைப்பாட்டமாக 134 ஓட்டங்களைத் தமக்கிடையே பகிர்ந்துகொண்டனர்.

கடந்த போட்டியைப் போலவே இம்முறையும் யுவராஜ்சிங், சிக்ஸர்கள், பவுண்டரிகள் விளாசி அதிரடி காட்டி ஜொலித்தார்.

இந்த நிலையில் 70 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஆரம்ப வீரர் கௌதம் கம்பீர் பீற்றர்சனின் பந்தில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து களம்புகுந்தார் அணித் தலைவர் டோனி. 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த இவரை போல்ட் செய்து வெளியேற்றினார் இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் போல் கொலிங்வூட்.

தொடர்ந்து வந்தவர் யூசுப் பதான். இவரும் ஓரளவு நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார். எனினும் மறுமுனையில் அதிரடியை வெளிப்படுத்திய யுவராஜ்சிங் 118 ஓட்டங்களுடன் புரோட்டின் பந்தில் பிறியரிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

பின்னர் வந்தார் ஹர்பஜன்சிங். இவர் 8 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் எதிர்பாராத விதமாக பீற்றர்சனால் ரண் அவுட் முறையில் வெளியேற்றப்பட்டார்.

அவரைத் தொடர்ந்து சகீர்கான் நுழைந்தார். அவரும் 1 ஓட்டத்தைப் பெற்றிருந்த போது படேலினால் ரண் அவுட் செய்யப்பட்டு பெவிலியன் திரும்பினார்.

தொடர்ந்து ஆர்.பி.சிங்கும் 4 ஓட்டங்களைப் பெற்று ஹார்மிசனின் பந்தில் போல்ட் செய்யப்பட்டு பவிலியன் திருப்பப்பட்டார். இறுதியாக வந்தவர் பட்டேல்.

அணியின் ஆட்டம் முடிவடையும்போது, பட்டேல் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் மறுமுனையில் தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய யூசுப் பதான் ஆட்டமிழக்காது 29 பந்துகளில் 50 ஓட்டத்தைப் பெற்று தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்த நிலையிலும் களத்தில் இருந்தனர்.

இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 292 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக சிறப்பாகப் பந்துவீசிய புரோட் 4 விக்கெட்டுக்களையும், ஹார்மிசன், கொலிங்வூட், பீற்றர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

293 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கியது இங்கிலாந்து அணி. அதன் ஆரம்ப வீரர்களாக இயன் பெல்லும், பிறியரும் களமிறங்கினர்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 6 ஆக இருக்கும்போது 1 ஓட்டத்தைப் பெற்றிருந்த பெல், சுரேஷ் ரெய்னாவினால் ரண் அவுட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்தவர் ஷா. இவர் பிறியருடன் இணைந்து அணியை ஓரளவுக்கு ஸ்திரமான நிலைக்கு கொண்டுசென்றார்.

இவர்கள் இணைப்பாட்டமாக 96 ஓட்டங்களை எடுத்திருந்தபோது 58 ஓட்டங்களுடன் ஷா யுவராஜ்சிங்கின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்தவர் பீற்றர்சன். எனினும் சிறிது நேரத்திலேயே மறுமுனையில் இருந்த பிறியர் 38 ஓட்டங்களுடன் யுவராஜின் பந்தில் போல்ட் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

அவரைத் தொடர்ந்து பிளின்ரொப் களமிறங்கினார். இவர் பீற்றர்சனுடன் இணைந்து அணியின் ஓட்டவேகத்தை அதிகரித்தார்.

இருவரும் இணைப்பாட்டமாக 72 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த நிலையில் 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிளின்ரொப் யுவராஜின் சுழலில் சிக்கி எல்.பி.டபிள்யு முறையில் வெளியேறினார்.

அவரைத் தொடர்ந்து கொலிங்வூட் களம்புகுந்தார். மறுமுனையில் இருந்த பீற்றர்சன் 33 ஓட்டங்களுடன் யுவராஜின் பந்தில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்தவர் படேல். எனினும் மறுமுனையில் இருந்த கொலிங்வூட் 2 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து வெளியேறினார்.



நேற்றைய போட்டியில் தனது சதத்தைப் பூர்த்தி செய்த மகிழ்ச்சியில் யுவராஜ்சிங்.

தொடர்ந்து போபரா களமிறங்கினார். இவரும் 3 ஓட்டங்களுடன் பதானின் பந்தில் ரெய்னாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்தவர் புரோட். இவர் படேலுடன் கூட்டுச் சேர்ந்தார். இந்நிலையில் படேல் 20 ஓட்டங்களுடன் ஷேவாக்கின் பந்தில் கம்பீரிடம் பிடிகொடுத்து பவிலியன் திரும்பினார்.

அவரைத் தொடர்ந்து ஹார்மிசன் களமிறங்கினார். எனினும் அவரும் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஷேவாக்கின் பந்தில் டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியாக அன்டர்சன் வந்தார். எனினும் மறுமுனையில் இருந்த புரோட் 22 ஓட்டங்களுடன் ஷேவாக்கின் பந்தில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். அன்டர்சன் ஆட்டமிழக்காது 1 ஓட்டத்தைப் பெற்றிருந்தார்.

புரோட்டின் ஆட்டமிழப்புடன் இங்கிலாந்து அணியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. 47 ஓவர்கள் முடிவில் இங்கிலாந்து அணி 238 ஓட்டங்களைப் பெற்று 54 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணியின் யுவராஜ்சிங் தெரிவு செய்யப்பட்டார். இவர் 118 ஓட்டங்களைப் பெற்றதுடன், பந்துவீச்சில் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் அணி இந்தியா செல்கிறது

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்திய அணியின் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் ரத்துச் செய்யப்படுமானால் அந்நாட்டு அணி இந்தியாவுக்குச் சென்று டெஸ்ட் தொடரில் விளையாடத் திட்டமிட்டுள்ளது.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் சென்று டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாட உள்ளது. பாகிஸ்தானில் தொடர்ந்து தீவிரவாதத் தாக்குதல் நடைபெற்று வருவதால் பாதுகாப்பு குறித்த அச்சம் நிலவுகிறது. ஏற்கனவே பாகிஸ்தானில் நடைபெற இருந்த சம்பியன்ஸ் கோப்பை ரத்துச் செய்யப்பட்டு விட்டது.

இந்திய அணி, பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடத் தயாராக இருந்தாலும், இதற்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்க வேண்டும். மத்திய அரசு பாதுகாப்பு நிலையை ஆராய்ந்து வருவதாகவும், இது பற்றி அரசின் சம்மதம் கிடைத்த பிறகே இந்திய கிரிக்கெட் சபை இறுதி முடிவெடுக்கும் என்றும் கூறப்படுகிறது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தச் சுற்றுப்பயணத்துக்கு அரசு அனுமதி மறுக்கவும் வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. சமீபத்தில் இந்திய ஜூனியர் ஹொக்கி அணி பாகிஸ்தான் செல்ல அனுமதி மறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மாற்று ஏற்பாடுகள் குறித்து ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தியா சுற்றுப்பயணத்தை ரத்துச் செய்து விட்டால் வேறொரு நாட்டில் இந்தத் தொடரை நடத்துவது பற்றியும் பாகிஸ்தான் பரிசீலித்து வருவதாகக் கூறப்படுகிறது.

வேறொரு நாட்டில் தொடரை நடத்துவதை விட பாகிஸ்தான் அணி இந்தியாவுக்குச் சென்று விளையாடுவது பற்றியும் தீவிரமாக பரிசீலித்து வருவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா பாகிஸ்தான் தொடர் இருநாடுகளுக்குமே வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் என்பதால் எப்படியாவது இந்தத் தொடரை நடத்த பாகிஸ்தான்கிரிக்கெட் சபை விரும்புகிறது. அதற்காக இந்தியாவுக்கு வருகை தரவும் பாகிஸ்தான் தயாராக உள்ளது - என்று தெரிவிக்கப்படுகிறது.




# மூன்றாவது போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றி

அபுதாபி, நவ.18

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது.

அபுதாபியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு வெற்றி இலக்காக 274 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் மேற்கிந்தியத் தீவுகள் 46.3 ஓவரில் 242 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதன் மூலம் பாகிஸ்தான் 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் வீரர் கெய்லே சதம் அடித்தார். எனினும் அவரால் தனது அணியை வெற்றி பெறச் செய்ய முடியவில்லை. அவர் 122 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் பந்து வீச்சாளர் இப்திகார் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். முன்னதாக யுனிஸ்கான் அபாரமாக ஆடி சதமடித்தார். முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தான் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஷாங்காய் டென்னிஸ் போட்டியில் சேர்பியாவின் ஜோகோவிச் சம்பியன்!

ஷாங்காய், நவ. 18

சீனாவில் நடந்த ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில், சேர்பிய வீரர் நோவாக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

நேற்று முன்தினம் நடந்த பரபரப்பான இறுதிப் போட்டியில், ரஷ்யாவின் நிகோலே டேவிடென்கோவுடன் ஜோகோவிச் மோதினார். முதல் செட்டில் டேவிடென்கோவின் பந்துகளை மிக எளிதாக முறியடித்து புள்ளிகளைக் குவித்த அவர் 6-1 என்ற கணக்கில் வென்று முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டில் டேவிடென்கோ ஈடுகொடுத்து விளையாடியதால் ஆட்டம் இழுபறியாக நீடித்தது. எனினும், தனது அதிரடி ஆட்டத்தால் டேவிடென்கோவை திணறடித்த ஜோகோவிச் 6-1, 7-5 என்ற நேர் செட்களில் வென்று, முதல் முறையாக மாஸ்டர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

ஜனவரியில் நடந்த அவுஸ்திரேலிய ஓபன் போட்டியில் முதல் முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற அவர், கடைசிப் போட்டியில் மாஸ்டர்ஸ் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரட்டையர் பிரிவில் கனடாவின் டானியல் நெஸ்டர் - நேனட் ஜிமான்ஜிக் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது. இறுதியில் நெஸ்டர் - ஜிமான்ஜிக் ஜோடி 7-6(3), 6-2 என்ற நேர் செட்களில் அமெரிக்க சகோதரர்கள் பாப் பிரையன் - மைக் பிரையன் ஜோடியை வீழ்த்தியது.

# ஹைடனுக்கு டோனி பதிலடி

இந்தூர், நவ. 18

இந்தியா பற்றி அவுஸ்திரேலிய வீரர் மத்யூ ஹைடன் தெரிவித்த கருத்துக்களுக்கு இந்திய அணித் தலைவர் டோனி பதிலடி கொடுத்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட்டின் போது ஓவர்களை தாமதமாக வீசியமைக்காக அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங் விமர்சனத்துக்கு உள்ளானார். இதற்குக் காரணம் இந்திய வீரர்கள் தாமதம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டதும், சைட் ஸ்கிரீன் போன்ற பிரச்சனைகளுமே என்று மத்யூ ஹைடன் கூறியிருந்தார். மேலும் இந்தியாவை ஒரு மூன்றாம் உலக நாடு என்றும் அவர் கூறியிருந்தார்.

இதற்கு இந்திய தலைவர் டோனி பதிலடி கொடுத்துள்ளார். அவுஸ்திரேலிய வீரர்கள் உலகில் எந்தப் பகுதியில் விளையாடினாலும், தாமதமாக ஓவர்களை வீசும் பழக்கம் கொண்டவர்கள். அப்படியிருக்க இந்தியாவை குறைசொல்வது ஏன் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஏற்கனவே இந்திய கிரிக்கெட் சபை ஹைடனுக்குப் பதிலடி கொடுத்துள்ளது. மேலும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் வசீம் அக்ரமும் பதிலடி கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# ரசிகர்களின் நெரிசலில் சிக்கிய டோனி, சகீர்கான், ஆர்.பி.சிங்!

புதுடில்லி, நவ. 18

மகாராஷ்டிரா கிரிக்கெட் அக்கடமியின் தொடக்கவிழா நடந்தது. அப்போது ஏற்பட்ட நெரிசலில், இந்திய அணியின் தலைவர் டோனி, சகீர்கான், ஆர்.பி.சிங்., ஆகியோர் சிக்கிக்கொண்டனர். எனினும் அவர்கள் காயமின்றி தப்பினர்.

புதியதாக கட்டப்பட்ட மகாராஷ்டிரா கிரிக்கெட் அக்கடமியின் தொடக்கவிழா நடந்தது. இதில் காட்சிப் போட்டியை தொடக்கிவைக்க தலைவர் டோனி, சகீர்கான் மற்றும் ஆர்.பி.சிங்., மூவரும் சென்றிருந்தனர். அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட ரசிகர்கள், தங்களது ஹீரோக்களைக் காண முண்டியடித்துக் கொண்டு மேடையை நோக்கி வந்தனர். பொலிஸில் இருந்து போதுமான பாதுகாப்பு செய்யப்படாததால், அங்கு நெரிசல் ஏற்பட்டது. அந்தக்குழப்பத்தில் இருந்து ஒரு வழியாக மூவரும் காயமின்றித் தப்பினார்கள்.

இதுகுறித்து பி.சி.சி.ஐ., நிதிக்கமிட்டி தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில், ''வீரர்கள் கலந்து கொண்ட நாளில் கிரிக்கெட் பயிற்சி ஏதும் இல்லை. பின்தங்கிய குழந்தைகளின் முன்னேற்றத்துக்காக மனிதாபமான அடிப்படையில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். வீரர்கள் எங்கள் அனுமதியுடன், போதுமான பாதுகாப்புடன்தான் சென்றனர்'' என்றார். ஆனால் இந்திய அணியின் முன்னாள் வீரர் சேட்டன் சவுகான், வீரர்கள் அங்கு சென்றமை குறித்துக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்-

''போதுமான அளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை. இங்கிலாந்துக்கு எதிரான தொடர் நடந்து கொண்டிருக்கும் போது, அணியை விட்டு எவ்வாறு வெளியில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்பதும் தெரியவில்லை'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வலுவிழந்தோர் தினத்தை பாடசாலைகளில் கொண்டாட அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.18

சர்வதேச வலுவிழந்தோர் தினம் சமூக, பாடசாலை கோட்டம் மற்றும் வலய மட்டங்களில் தவறாது கொண்டாடப்பட வேண்டுமென வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வலியுறுத்தி அறிவித்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதியிடப்பட்ட அறிவித்தல் சகல வலயப் பணிமனைகளுக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

சமூகம், பாடசாலை, கோட்டம், வலயம் ஆகிய சகல மட்டங்களிலும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி கொண்டாடப்படவேண்டும்.

இந்த மாதம் 27ஆம் திகதி தொடக்கம் ''வலுவிழந்தோரின் மனித உரிமைகளைப் பேணுவோம்'' என்ற தொனிப் பொருளில் வலுவிழந்தோர் வாரம் அனுஷ்டிக்கப்பட வேண்டும்.

பாடசாலை மட்டத்தில், விளையாட்டு, கட்டுரை, பேச்சு, நடனம், நாடகம், சித்திரம் முதலான போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

வலய மட்ட நிகழ்வுகள் இறுவட்டுகளில் பதிவுசெய்து டிசம்பர் 10 ஆம் திகதிக்கு முன் வலயப் பணிப்பாளர்கள் மாகாணத் திணைக்களத்திற்கு அனுப்பவேண்டுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-302)

# வடமராட்சிப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை

வடமராட்சி,நவ.18

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 47 ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே சேவையாற்றி வருகின்றனர்.

ஆங்கில ஆசிரியர் இன்மையால்-வடமராட்சிப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாது சிரமப்பட்டு வருகின்றனர். இங்குள்ள சிறிய பாடசாலைகள் மாத்திரமன்றி பல பெரிய பாடசாலைகளில் கூட ஆங்கிலக் கல்வியைப் போதிக்க ஆசிரியர்கள் இல்லாதிருக்கின்றனர்.

இப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆங்கிலம் போதிக்க,வலயக் கல்வித்திணைக்களத்தினால் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்ட போதிலும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் போதியளவு இருக்கவில்லை.

105 ஆங்கில ஆசிரியர்களுக்கு வடமராட்சி வலயத்தில் பற்றாக்குறை இருந்து வருவதனால் அப்பற்றாக்குறையை ஈடு செய்யவும், ஏதோ ஒருவழியில் மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியைப் போதிக்கவும் வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும் அது சாத்தியப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில ஆசிரிய பற்றாக்குறையைப் போக்க வடமாகாண கல்வித் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வடமராட்சிப் பிரதேச மாணவர்களுக்கு சிறந்த ஆங்கிலக் கல்வியை வழங்க முன்வரவேண்டும் என பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-236)

# ஆறுமுக நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம்,நவ.18

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின், யாழ்.பிராந்திய அலுவலகம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு மேற்படி திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் மா.வேதநாதன் பிரதம விருந்தினராகவும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (201-77)

# குடாநாட்டில் சேவையிலுள்ள பஸ்களில்: ஒரு தொகுதிக்கு உதிரிப்பாகங்கள் வந்தன

யாழ்ப்பாணம்,நவ.18

குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச.பஸ்களுக்குத் தேவையான ரயர், ரியூப் உள்ளிட்ட உதிரிப்பாகங்களின் ஒரு தொகுதி வந்து சேர்ந்துள்ளன.

கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட உதிரிப்பாகங்கள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் இ.போ.ச.டிப்போக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அவை பஸ்களுக்குப் பொருத்தப்பட்டு வருகின்றன.

உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டதும் குடாநாட்டு பஸ்சேவை ஓரளவுக்கு சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை எடுத்துவரப்பட்ட உதிரிப்பாகங்கள் இங்குள்ள பஸ்களுக்குப் போதுமானதாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (202-236)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# அச்சுவேலி வைத்தியசாலைக்கு ஜெனரேட்டர் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.18

அச்சுவேலி பிரதேச அரசினர் வைத்தியசாலைக்குப் புதிய 37.5 கிலோ வாட்ஸ் சக்தி கொண்ட மின்சார ஜெனரேட்டர் ஒன்று யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

முன்னர் இவ்வைத்தியசாலையில் மிகச் சிறிய மின்ஜெனரேட்டர் ஒன்று இருந்தது. மின்சாரம் தடைப்படும் வேளைகளில் சிறிய ஜெனரேட்டர் மூலம் பெறப்படும் மின்சாரம் வைத்தியசாலைக்கு போதுமானதாக இல்லாதிருந்தது.

யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் எடுத்த நடவடிக்கையினால் யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்குஜப்பானிய அரசினால் வழங்கப்பட்டுள்ள அதிசக்தி வாய்ந்த 37.5 கிலோ வாட்ஸ் கொண்ட பெரிய ஜெனரேட்டர் இவ்வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. (202-236)



யாழ்.கல்வி வலயத்தின் உடற்கல்விப் பிரிவினால் வெளியிடப்பட்ட 'சுக அப்பியாசம்' (கீழைத்தேச இசை) இறுவட்டு வெளியீடு யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வை.ரவீந்திரன் தலைமையில் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் வை.ரவீந்திரன் தலைமை உரையாற்றுவதையும் யாழ்.கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றுவதையும் - 'சுக அப்பியாசம்' இறுவட்டை மக்கள் வங்கியின் வடமாகாணப் பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்த ராசா வெளியிட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

# பொருளாதார ரீதியில் மக்களை வளப்படுத்தும் கியூடெக் நிறுவனம்

## சுகாதாரப் பணிப்பாளர் கருத்து

நல்லூர்,நவ.18

பொருளாதார ரீதியில் பின்னடைந்த மக்களுக்கு முழுமையான உதவிகளை வழங்கிவரும் 'கியூடெக் - கரித்தாஸ்' நிறுவனம் இன்றைய சூழலில் முக்கியத்துவம் மிக்க ஒன்று. இதன் பணிகள் தொடர்வதன் மூலம் இந்தச் சமுகம் மேம்பாடு காணும். இவ்வாறு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

'கியூடெக் - கரித்தாஸ்' நிறுவனத்தின் 40ஆவது ஆண்டு நிறைவுவிழா திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையரங்கில் கடந்த சனிக்கிழமை நிறுவன இயக்குநர் அருட்திரு.சி.ஜீ.ஜெயக்குமார் தலைமை யில் நடைபெற்றது .

நிகழ்வின் பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தொடர்ந்து பேசும் போது கூறியவை வருமாறு:

சுனாமியின் பேரழிவில் மக்கள் சிக்கி அவதிப்பட்டுக் கொண்டிருக்கையில் உடனடியாகவே பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அந்த மக்களுக்கு உதவுவதில் இந்நிறுவனம் முன்னின்றது. அவர்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுப்பதிலும் துரிதம் காட்டியது. மக்களுக்கு எத்தகைய உதவிகள் உடனடித்தேவை என்பதைப் புரிந்துகொண்டு அதற்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படும் ஒரு சிறந்த நிறுவனமாக மக்கள் மத்தியில் ஒருதனி இடத்தைப் பெற்றுக் கொண்டது.

சுனாமி மட்டுமன்றி போரினால் அகதிகளாக்கப்பட்ட மக்களின் தேவைகளுக்கும் அது கைகொடுத்துள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக மக்களின் மருத்துவ சேவைக்காக எங்களுடன் முழுமையாக ஒத்துழைத்து உதவியதுடன் சிறுவர்களின் உளநலம் தொடர்பான எமது செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்துள்ளது.

நடமாடும் சேவைகளின் மூலம் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களும் மருத்துவ சேவை பெறக் கூடியதாக இருந்தது. சமூகத்தின் இடர்பாடுகளைக் களைந்து அனைத்து மக்களும் சிறப்பான வாழ்க்கைக்கு உரியவர்களாக மாறவேண்டும் என்பதில் 'கியூடெக் - கரித்தாஸ்' நிறுவனம் கொண்டுள்ள பங்களிப்பும் அக்கறையும் தொடரவேண் டும் - என்றார்.

ஐ.நா. உணவு விவசாய நிறுவன இயக்குநர் மா.சிவானந்தம் பேசும்போது கூறியவை வருமாறு:

ஆரம்பத்தில் இரணைதீவில் இருந்து படிப்படியாக இந்தப் பிரதேசம்வரை 'கரித்தாஸ்' அமைப்பு பல்வேறு துறைகளிலும் மக்களின் வளர்ச்சியை மையமாகக் கொண்டு செயல்படுகின்றது. பிரச்சினைகளின் மத்தியில் மக்கள் எதிர்கொள்ளும் துயரங்களில் இருந்து அவர்கள் ஆறுதலடையக் கூடியதான உதவித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வந்துள்ளது. இங்குள்ள பெண்களினதும் மீனவர்களதும் வாழ்வாதாரத்திற்கான தொழிற்பாடுகளை வளர்த்தெடுப்பதில் இந்த நிறுவனம் மேற்கொண்ட முயற்சிகளால் [illegible] பிரச்சினைகளில் இருந்து அநேக குடும்பங்கள் ஓரளவாவது விடுபட்டுள்ளமை இதன் மனிதநேயம்மிக்க நடவடிக்கைகளுக்கு சான்றாக உள்ளது.

இன்று சிக்கல்கள் வளர்ந்து கொண்டிருக்கும் சூழலில் இதன்பணி மேலும் வேகமாக இருக்கவேண்டும் ஏன்பதால் எல்லோரும் இந்த நிறுவனத்தின் சேவைகளுக்கான தமது முழு ஒத்துழைப்பையும் நல்கவேண்டும். - என்றார்.

புலம்பெயர்ந்தோருக்கான நிறுவனத்தின் இயக்குநர் சு.நிக்கோபின் உட்படப் பலர் இந்நிகழ்வில் உரையாற்றினார்.(202-111-302)

# தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் விழா

சுன்னாகம்,நவ.18

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்குச் சுன்னாகம் பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.

வலி.தெற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலனும் சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதனும் கலந்து கொள்வர். (202-38)

# யாழ்.மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு பிரதேச மட்டத்தில் தொழில்பயிற்சி நெறிகள்

நவாலி, நவ.18

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை வாழ்க்கைத்தொழில் தொழில்நுட்ப அமைச்சின் ஊடாக யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் இளைஞர், யுவதிகளுக்குப் பல தொழிற்பயிற்சிகளை நடத்தி வருகின்றது.

இதற்கமைய ஆரம்பத்தில் கடந்த 2000ஆம் ஆண்டில் வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அராலி வடக்கில் வீட்டு மின்இணைப்பு பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு முதல் வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு மாற்றப்பட்டு பயிற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இங்கு 2005ஆம் ஆண்டு வரை 2744 பேர் பயிற்சி பெற்று அதில் 117 பேர் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

தற்போது கணனி பிரயோக உதவியாளர் பயிற்சியும், உலக கஜேடிய பல்கலைக்கழக நிதிஉதவியுடன் அலுமினியம் பொருத்தும் பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வீட்டு மின்இணைப்பு பயிற்சியும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மேசன் பயிற்சியும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் மோட்டார் சைக்கிள் திருத்துதலும் நடைபெற்று வருகின்றன.

உயர் கல்வியைத் தொடரமுடியாத மாணவர்கள் இத்தொழிற்பயிற்சி மூலம் தேசிய தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்று அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பை பெறக்கூடியதாக உள்ளது. அத்துடன் சுய தொழில் செய்வதன்மூலம் தமது வாழ்க்கைக்கேற்ற வருமானத்தையும் பெறமுடியும் என்றும் சண்டிலிப்பாய் பிரதேச தொழிற்பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் தெரிவித்துள்ளார். (202-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இதழியல் டிப்ளோமா மீள் பரீட்சை - 2007
## முதலாம், இரண்டாம் அரையாண்டு

மேற்படி பரீட்சை 24.11.2008ஆம் திகதி ஆரம்பமாகும். பரீட்சை அட்டவணையை மீள்பரீட்சார்த்திகள் ஊடக வள பயிற்சி நிலையத்திலும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையிலும் பார்வையிடலாம்.

*பதில் பதிவாளர்.* யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
*14.11.2008* *யாழ்ப்பாணம்.*

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
07 . 04 . 1917
மறைவு
19 . 10 . 2008

### ஸ்ரீமான் Dr.இளையதம்பி நன்னித்தம்பி(J.P)

*{முன்னாள் உபதலைவர்-புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலசபை, முன்னாள் தலைவர்-கணேச சனசமூக நிலையம், தலைவர்- புன்னாலைக்கட்டுவன் நலன்புரிச் சங்கம், போஷகர்-புன்னாலைக்கட்டுவன் அரசினர் மத்திய வைத்தியசாலை அபிவிருத்திசபை, அகில இலங்கை சமாதான நீதிவானும், சமயப் பெரியாரும், இளைப்பாறிய பிரதேச பதிவுபெற்ற வைத்தியர் (DRMP)}*

அனுதினமும் ஆயாக்கடவையானை வேண்டியதால்
ஆயிரம் பிறைகள் கண்டு அவனியிலே மேன்மை பெற்று
இன்பமுற நாம் வாழ்வதற்கு என்றும்
ஈடில்லா ஆசிகளை வழங்கி நிற்பீர்!

*ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:*

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
**குடும்பத்தினர்.**

## நிர்வாகிகள் தெரிவு

நவாலி,நவ.18

மானிப்பாய் ப.நோ.கூ.சங்க நவாலி கிளை 6 இன் கிளைக் குழு உத்தியோகத்தர்கள் தெரிவும் பொதுசபை உறுப்பினர்கள் தெரிவும் கடந்த வாரம் பொது முகாமையாளர் ப.நோ.கூ.சங்கத் தலைவர் ஆகியோரினால் நடத்தப்பட்டன.

இதில் தலைவராக க.தர்மலிங்கமும், உப தலைவராக க.சிவபாலனும் செயலாளராக பி.பொன்னுத்துரையும் தெரிவு செய்யப்பட்டனர். (202-100)

## வலி.கிழக்கு முன்பள்ளிகளின் சிறார்களுக்குப் பசுப்பால்

கோப்பாய்,நவ.18

வலி.கிழக்கு பிரதேசத்தில் 89 முன்பள்ளிகளைச் சேர்ந்த 1900 சிறுவர்களுக்கு தினம் தோறும், பசுப்பால் வழங்கப்பட்டு வருகிறது.

தினமும் காலை 8.30 மணிக்கு பால் வழங்கப்பட்டு வருகிறது.

காய்ச்சிய பதப்படுத்திய பாலை கோப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்தினர் விநியோகித்து வருவது குறிப்பிடத்தக்கது. (202-72)

## மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளையில் சனியன்று அடகுச் சேவை

வடமராட்சி,நவ.18

பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையில் சனிக்கிழமைகளிலும் நகை அடகுச் சேவை இடம்பெற்று வருவதாக முகாமையாளர் மு.சிவநேசன் தெரிவித்தார்.

இதுவரை காலமும் ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் வெள்ளிவரையே நகை அடகுச் சேவை நடைபெற்று வந்தது. இப்போது பொதுமக்களின் வசதிகருதி சனிக்கிழமைகளிலும் அடகுச்சேவை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (202-236)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.18

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய முதலாவது அணி பகுதிநேர மற்றும் முழு நேர மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (202-236)

## கண்ணீர் அஞ்சலி




### திருமதி சந்திரவதனி முருகவேள்
(B.A. (Hons), Dip in Edu.)
(ஆசிரியை, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், )

எமது கல்லூரி ஆசிரியையின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம். சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கண்மகிழ
05 . 01 . 1932
கண்நெகிழ
29 . 11 . 2007

### அமரர் கதிரவேலு சுப்பையா
திதி: பூரணை, 18.11.2008

காலனவன் உங்களுயிர் கவர்ந்துசெல்ல
கண்ணீரால் விழிகழுவி
மனம்பேதலித்து நின்ற எம்மைப் பார்த்து
காலனும் இரங்கலியே!
உங்கள் கண்டிப்பான பார்வையும்
கனிவான பேச்சும் கம்பீர நடையும்
எங்கள் மனதை விட்டு அகலவில்லை
எனினும் அவற்றை எப்போது காண்போம்?
கண்களில் ஓடும் உனதன் புருவெங்கே
கைகளால் அமுதூட்டும் காட்சியெங்கே
எண்ணங்களில் அணைத்திடும் மார்பெங்கே
எல்லாம்மேல் முத்தமிடுகின்ற முகமெங்கே?
காலத்தின் கொடுமை உங்களை இழந்தது
காலமும் நினைத்து நினைத்து வாழ்கின்றோம்
மேலதாய் கண்ணீரில் விளக்கெரித்தோம்
மெலிந்துதினம் கவலை நோயால் தவிக்கின்றோம்!

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*மானிப்பாய் வடக்கு,*
*மானிப்பாய்.*

## விழிநீர் சொரிகின்றோம்



### அமரர்
### செல்வராஜா சதீஸ் (விபி)

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலி.தென்மேற்கு பிரதேச செயலகம்)

எம் உயிரில் கலந்தவனே
உணர்வோடு நிறைந்தவனே
பாதி வழியில் உறவறுத்துப்
பட்டென்று போனவனே
நீதியற்ற கூற்றுவனோடு
கூடிப்போன கோமகனே
நாதியற்ற எங்களுக்கு இனி
விழி துடைக்க எவருமில்லை.

(79939)

எங்கள் ஆருயிர் நண்பன் விபியின் திடீர் மறைவினால் உயிர் கலங்கித் தவிக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உன் பாசவலையில் சிக்கித் தவிக்கும்:* **மானியூர் நண்பர்கள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
22.01.1943
அரன் அடியில்
29.11.2007



### அமரர் செல்லையா சிவஞானசுந்தரம்
(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்)

திதி: 18.11.2008

எம் உயிரினில் கலந்து
உணர்வினில் ஒன்றிவிட்ட
அன்பு அப்பாவே!
தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

விநாயகர் தோட்டம்
தும்பளை,
பருத்தித்துறை.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், வெள்ளை அமெரிக்கர்களால் வெறுத்துப் புறமொதுக்கப்பட்ட அமெரிக்க உறுப்பின மக்களின் சம உரிமைக்காக - அவர்களது குடிசார் உரிமைகளுக்காகப் போராடி அநியாயமாகப் படுகொலையுண்ட மார்ட்டின் லூதர் கிங்கின் இறுதி மூச்சுக் கனவு, பராக் ஒபாமாவின் மூலம் இன்று நனவாகியுள்ளது. கறுப்பினப் பிரமுகரைத் தமது நாட்டின் அரசியல் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு அமெரிக்க மக்களின் ஜனநாயக அரசியல் கலாசாரமும் விட்டுக் கொடுப்பு உணர்வும் இன்று உச்சம் பெற்றுள்ளது என்பதையும், ஐம்பதாண்டுகளுக்குப் பின்னரான இலங்கையின் நிலைப்பாட்டையும் ஒப்புநோக்கும் வகையிலும் அமைகிறது இக்கட்டுரை.**

**பிரபல ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரியவால் எழுதப்பட்ட இக்கட்டுரை, கடந்த 09ஆம் திகதிய 'ராவய' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது.**

**அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.**

# வெள்ளையினச் சிறார்களுடன் சமமாகக் கல்வி கற்கத் தகுதியற்றிருந்த கறுப்பின அமெரிக்கச் சிறுவனே இன்று அந்த நாட்டின் ஜனாதிபதி!

"சாதனையாளராகத் தன்னைப் பூரணப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற 'பராக் ஒபாமா'வின் தாகத்தை ஆற்றலாக மாற்றிவிடக் காரணமாக அமைந்தவர், அமெரிக்காவின் டென்ஸி மாகாணத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்ட மார்டின்லூதர்கிங் என்ற உதாரண புருஷரே ஆவார்."



உலகப் புகழ்பெற்ற 'ஒப்பராசின் ப்ரீஷோ' என்ற தொலைக் காட்சி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும் 'ஒப்ரா சின் ப்ரீயே' இவ்வாறு கருத்து வெளிப்படுத்தியிருந்தார்.

''ஜனாதிபதித் தேர்தல் தினமான இந்த இரவில் நாம் பெருமிதம் அடைவதற்கு, தனது சுகபோக வாழ்க்கையைத் துறந்து, பராக் ஒபாமாவின் அடியொற்றி எமது குழந்தைகளும் பயணிப்பதற்கு வழி சமைத்துக் கொடுக்கும்முகமாக இந்த நாடு முழுவதும் சஞ்சரித்தொரு மனிதரே காரணமாகிறார்'' இக்கருத்தை வழங்கியவர், குடிசார் உரிமைகளுக்கான அமைப்பின் அல் செப்ரோணியே ஆவார்.

அனைவராலும் குறிப்பிட்டுக் கூறப்படுபவர் வேறு யாருமல்ல. 1960களில் அமெரிக்காவையே கலக்கிவிடக் காரணமாகியிருந்த குடிசார் உரிமைகள் தொடர்பான அமைப்பின் சிற்பியான மார்ட்டின் லூதர் கிங் (ஜூனியர்) என்ற மனிதரே அவராவார்.

''மாற்றத்தை ஏற்படுத்த (Yes we can) எம்மால் முடியும்'' - என்ற ஒபாமாவின் முன்னுதாரண அறைகூவல் வார்த்தையை, அவரது வெற்றிச் சாதனையின் பின்னர், அதைவிட வித்தியாசமான அர்த்தம் தொனிக்கும் விதமாக மாற்றியமைப்பதற்காக நடத்தப்பட்ட போட்டியில் முதன்மைப் போட்டியாளராகக் கலந்துகொண்டு அதை, மாற்றியமைத்தவர் மார்ட்டின் லூதர் கிங்கின் புதல்வியே என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வார்த்தைகள், மாற்றத்தை நாம் ஏற்படுத்திவருகிறோம். (Yes we have) என்றவாறு அமைய வேண்டியுள்ளதாக அவர் தமது யோசனையை முன்வைத்திருந்தார்.

**ஒபாமாவின் வரலாறு**

இவ்வளவுக்கும், பராக் ஒபாமாவின் தந்தை கறுப்பினத்தைச் சேர்ந்த ஒரு கென்ய நாட்டுப் பிரஜையே ஆவார். இஸ்லாமிய மதவாதியாவார். ஒபாமாவின் தாயார் வெள்ளை இனத்தைச் சேர்ந்ததொரு அமெரிக்கப் பெண்ணேயாவார். ஒபாமாவின் சிறுபராயத்திலேயே அவரது பெற்றோர் விவாகரத்துச் செய்து கொண்டனர். தனது தாயாருடன் வசிப்பதை விடுத்து, 1971ஆம் ஆண்டில் ஒபாமா அமெரிக்காவுக்கு வந்தார். இந்த பராக் ஒபாமாவே வெள்ளை இனத்தவர் சார்ந்த வெள்ளை அமெரிக்காவின் ஜனாதிபதியாக அந்நாட்டின் மக்களால் சுமுகமான - சுதந்திரமானதொரு தேர்தலின் ஊடாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், அமெரிக்காவில் வாழ்ந்த கறுப்பின மக்கள், பஸ் ஒன்றில் வெள்ளையினத்தவருடன் சமமாக அமர்ந்து பயணிக்கும் உரிமை தமக்கு அமையவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் நடத்தினர். வெள்ளையினச் சிறார்கள் பயிலும் பாடசாலையில் தமது கறுப்பினச் சிறார்களும் பயிலும் உரிமை வேண்டுமெனப் போராடி நின்றனர்.

அமெரிக்க குடிசார் உரிமைகளுக்கான அமைப்பும், அதன் ஆற்றல்மிக்க தலைவராக மார்ட்டின் லூதர் கிங் (ஜுனியர்) நியமிக்கப்பட்ட நிகழ்வும், கறுப்பின மக்களின் குடிசார் உரிமைகளை வென்றெடுக்கும் அவர்களது அஹிம்சை வழிப் போராட்டத்தின் மத்திலேயே இடம்பெற்ற நிழ்வுகளாகும்.

வன்முறைகள் மூலமாகவே உரிமைகளை

**தமிழில் : சரா**

வென்றெடுக்கவேண்டியுள்ளது என எழுந்த கடும்போக்கு வாதங்கள், அஹிம்சாவாத நீரோட்டத்தால் மூழ்கடித்து விடப்படுவதற்கு அதன் போராட்டத் தலைமைத்துவம் மற்றும் தொடர்ச்சியான போராட்டங்களுமே திறனாற்றல் பெற்றிருந்தன. அந்த உரிமைப் போராட்டத்தின் கண்ணியமான கௌரவம்மிக்க தலைவரான மார்ட்டின் லூதர் கிங் 1964ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிக் கொண்டிருந்தவேளையில் சுட்டுக்கொல்லப்பட்டார். உயிர் பிரியும் தறுவாயில் அவர் வெளிப்படுத்திய 'எனக்கொரு கனவு உண்டு' - என்ற வார்த்தை இன்றைய அளவிலும் மக்கள் மத்தியில் ஒலிக்கும் உயிரோட்டம் மிக்கதொரு கனவேயாகும்.

இன்று, அதாவது ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் - அன்று, வெள்ளையினச் சிறார்களுடன் ஒரே பாடசாலையில் பயிலுவதற்கு உரிமையற்று நின்ற கறுப்பினச் சிறுவனே இன்று அந்நாட்டின் ஜனாதிபதியாகியுள்ளார்.

நாம் எங்குள்ளோம்? எங்கே நிற்கிறோம்? எனது நினைவுகள் பசுமையாக உள்ளன. ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நாம் அம்பலன்கொட என்ற ஊரில் வசிக்க ஆரம்பித்தவேளையில் அன்றாடம், எமக்குத் தேவைப்பட்ட பொருள், பண்டங்களை தமிழர்களுக்குச் சொந்தமான கடைகளிலேயே கொள்முதல் செய்தோம். யாழ்ப்பாணத்துத் தமிழ் வர்த்தகளின் நான்கைந்து கடைகள் அம்பலாங்கொட நகரத்தின் பிரதான வீதியில் அமைந்திருந்தன.

1965ஆம் ஆண்டில், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் சம்மேளனத்தின் வருடாந்தக் கூட்டத் தொடர் யாழ்ப்பாணத்திலேயே இடம்பெற்றது. தீவிர கம்யூனிஸ்ட் வாதியான எனது தந்தையாருடன் நானும் எனது மூத்த சகோதரரும் மேலும் நூற்றுக்கணக்கானோரும் அந்த நிகழ்வுக்கு ரயில் மூலமாகவே யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தோம். அந்த ரயிலில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தமிழ்க் குடும்பமொன்று தாம் எடுத்து வந்திருந்த உணவில் ஒரு பகுதியை எமக்கு வழங்கி எம்முடன் பகிர்ந்துகொண்டது. நாம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது, என்னிடமோ எனது சகோதரரிடமோ தெரிவிக்காது கள் விற்பனைச்சாலைக்குச் சென்று சிரட்டையில் கள் அருந்திக்கொண்டிருந்த எமது தந்தையாரை சிங்கள மொழியில் உரையாடிய யாழ்ப்பாணத்து மக்களின் ஒத்துழைப்புடனேயே எம்மால் தேடிக் கண்டுபிடிக்க முடிந்தது.

(தொடரும்)

---

# சாவகச்சேரிப் பிரதேச விவசாயிகள் இன்று கௌரவிக்கப்படவுள்ளனர்

யாழ்ப்பாணம்,நவ.18

சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்குச் சாவகச்சேரி, டச்சு வீதி ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெல் உற்பத்தி, சுயவிதை நெல் உற்பத்தி, சேதனப் பண்ணையாளர், ஒருங்கிணைந்த பண்ணையாளர், பெண் தலைமைத்துவ விவசாயி, சோளம் உற்பத்தி, நிலக்கடலை உற்பத்தி, குரக்கன் உற்பத்தி ஆகியவற்றில் தெரிவுசெய்யப்பட்டவர்களே கௌரவிக்கப்படவுள்ளனர்.

விவசாயப் போதனாசிரியர் சு.விஜயகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரத்தினம், தென்மராட்சி வலயக் க்ல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

போட்டியில் சிறந்த விவசாயிகளாக தெரிவுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

*சிறந்த நெல் உற்பத்தியாளர்:* பொ.தர்மலிங்கம் (சரசாலை தெற்கு), ச.நடராசா (மட்டுவில் கிழக்கு), இ.இராசலிங்கம் (சரசாலை வடக்கு).

*சிறந்த சேதனப் பண்ணையாளர்:* ஐ.கெங்காதரன் (மீசாலை வடக்கு), ச.ஞானச்சந்திரன் (மீசாலை வடக்கு), கா.வேதநாயகம் (கல்வயல்).

*சிறந்த சுயவிதைநெல் உற்பத்தியாளர்:* வே.செல்வராசா (மண்டுவில், மீசாலை), பொ.சண்முகசுந்தரம் (மிருசுவில் வடக்கு), க.தியாகராசா (வரணி வடக்கு).

*சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்:* க.சிவசேகர் (மட்டுவில் கிழக்கு), சு.க.சண்முகசுந்தரம் (மட்டுவில் கிழக்கு), சி.அழகராசா (மட்டுவில் வடக்கு).

*சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயி:* திருமதி க.ஞானச்சந்திரன் (சரசாலை வடக்கு), திருமதி ர.சுதர்சினி (தாவளை, இயற்றாலை), திருமதி பொ.வசந்தமாலறஞ்சினி (குடமியன், வரணி).

*சிறந்த சோளச் செய்கையாளர்:* திருமதி வே.ஜெயமளாதேவி (நுணாவில் மேற்கு), ந.குகநாதன் (கல்வயல்), ச.சண்முகநாதன் (மட்டுவில் வடக்கு).

*சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்:* செல்வி ஆ.யுகந்தினி (குடமியன், வரணி), கு.சுந்தரலிங்கம் (நுணாவில் மேற்கு), அ.பற்குணநாதன் (கல்வயல்).

*சிறந்த குரக்கன் செய்கையாளர்:* சூஸ்ரீதரன் (நுணாவில் மேற்கு), பே.தர்மராசா (கச்சாய்), வே.சுந்தரலிங்கம் (தாவளை, இயற்றாலை).

## பாடசாலைகளில் ஆண்டிறுதிப் பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ்.கல்வி வலயத்தைச் சார்ந்த பாடசாலைகளில் ஆண்டிறுதிப் பரீட்சைகள் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 9 நாள்கள் நடைபெறவுள்ளன.

தரம் 9 (தேசிய மட்டப்) பரீட்சையும் அதேதினம் ஆரம்பித்து இந்த மாதம் 26ஆம் திகதி முடிவடையும்.

தரம் 9 தொடக்கம் தரம் 10 வரையான வலய மட்டப் பரீட்சைகள் இந்த மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை நடைபெறும்.

தரம் 3 - தரம் 5 வரையான ஆரம்ப வகுப்புகளுக்கான பரீட்சை டிசம்பர் முதலாம் திகதி ஆரம்பித்து 4 நாள்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (202-302)

## முன்பள்ளித் தொண்டர்களுக்கான விழிப்பூட்டல் பயிற்சிச் செயலமர்வு

கோப்பாய்,நவ.18

வலி.கிழக்கு பிரதேச எல்லைக்குட்பட்ட முன்பள்ளித் தொண்டர்களுக்கான விழிப்பூட்டல் பயிற்சிச் செயலமர்வு அண்மையில் புத்தூரில் உள்ள 'போரூட்' தலைமைப் பணிமனையில் நடைபெற்றது.

'போரூட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் சிறுவர்களுக்கான உணவு விநியோகம், செவ்வை பார்த்தல், பதிவேடுகள் பேணுதல் ஆகிய விடயங்கள் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்தச் செயலமர்வில் 'போரூட்' திட்டப் பணிப்பாளர், பிரதேச சபைச் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர். (201-72)

## குடியிருப்பாளர் விவரம் பொலிஸாரால் சேகரிப்பு

யாழ்.நகரப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்களின் விவரங்கள் நகரப் பகுதி பொலிஸாரினால் வீடுவிடாகச் சென்று பதியப்பட்டு சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பெயர், தொழில், வயது, பால் மற்றும் விவரங்களுடன் வாகனங்கள், கணனி போன்ற உபகரணங்களின் விவரங்கள் இரண்டு பிரதிகளில் பதியப்பட்டு ஒன்று குடியிருப்பாளர்களிடம் கையளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-302)

## அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம்,நவ.17

காரைநகர் வியாவில் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் அதிபராக க.சுந்தரலிங்கம் இந்த மாதத்தில் இருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

ஊர்காவற்றுறைக் கல்விக்கோட்ட தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த 11 வருடங்களாக கடமை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பாடசாலையின் அதிபர் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றதைத் தொடர்ந்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (202-302)

# பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் அனைவரும் கவனம் செலுத்துவது அவசியமாகும்

**பால் வழங்கும் நிகழ்வில் அறிவுறுத்தல்**

நல்லூர்,நவ.18

எல்லோரது கவனமும் குழந்தைகளின் உடல், உள, அறிவு வளர்ச்சியில் அக்கறை கொண்டதாக அமையவேண்டும். ஆரோக்கியமும் திடகாத்திரமும் கொண்ட பிள்ளைகள் கல்வியிலும் சிறந்து விளங்கமுடியும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கூறினார்.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிறுவர்களுக்குப் பால் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய மேலதிக அரச அதிபர் சிவசுவாமி சிறுவர்கள் மத்தியில் இன்று போஷாக்கின்மை காணப்படுகிறது. சத்துணவுகள் கிடைப்பதும் விலை அதிகரிப்பும் இதற்குக் காரணமாகலாம். உள்ளூரில் உற்பத்தியாகும் பாலைப் பிள்ளைகளுக்கு வழங்குவதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தவிர்க்கக்கூடியதாக இருக்கும். இப்பொழுது எமது பிரதேசத்தில் பால்வளம் கணிசமாக இருக்கிறது என்பதால் பிள்ளைகளுக்கு அவற்றை வழங்கி அவர்களை ஆரோக்கியமிக்கவர்களாக வளர்த்தெடுப்பதில் பெற்றோர்கள் கவனம் செலுத்தவேண்டும் - என்றார்.

கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.ரி.சிவபாதம் பேசும்போது கூறியவை வருமாறு:

பிள்ளைகளின் போஷாக்கு விடயத்தில் விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி அவர்களுக்குத் தேவையான சத்துணவை வழங்கப் பெற்றோர்கள் பின்னடிக்கும் அதேவேளை மதுவுக்காக மிகக் கூடுதலான பணத்தைச் செலவு செய்யும் தந்தைகளை நிறையவே காணலாம். தமது பிள்ளைகள் நோய் நொடியற்று திடகாத்திரம் கொண்டவர்களாக வாழவேண்டும் எனில் வாழ்வையே அழிக்கக்கூடிய அநாவசிய செலவுகளை நிறுத்தி பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்ளவேண்டும் என்று கூறினார்.

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எம்.மரியதாஸ், கால்நடை உதவிப்பணிப்பாளர் திருமதி வீ.அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினார்கள். (111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசிரியர்:- K.P.Rajakopal (B.A.) Geography Special - Colombo -

# Special Guidance for O/L 2008 Students

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

**T / 33 / I** வரலாறு - I **One hour**

மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் எழுதுக.

01. நாட்டில் செழுப்பு நிலை காணப்பட்ட காலங்களில் நாணயங்கள் செய்யப் பட்ட உலோகம்
1) தங்கம் 2) வெள்ளி
3) செப்பு 4) தகரம்

02. கி.பி 640 இல் இந்தியாவுக்கு விஜயம் செய்த சீன தேச சஞ்சாரி யார்?
1)ஹியூங் சாங் 2)பாகியன் 3)மெகஸ் தனிஸ் 4)சென் ஓ

03. இருது சங்காரம்,சாகுந்தலம் என்பன எக் கால இலக்கியங்கள்
1) மௌரிய 2) சோழ 3) குப்த 4) பல்லவ

04. படதொலலேன,பாகியன்கல,குருகல் ஹின்ன என்பன முக்கியம் பெறுவது
1) பெரிய குகைகள் உள்ளதால்
2) உல்லாசப் பிரயாணிகளுக்குரிய இடமென்பதனால்
3) வரலாற்றுக்கு முந்திய இடுகாடுகள் உள்ளதால்
4) வரலாற்றுக்கு முந்திய இலகு ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்டதால்

05. திசாவாவியிலிருந்து ரன்மசு பூங்காவுக்கு நீர் கொண்டு செல்ல சுரங்க நீர் கால்வாய் கட்டிய மன்னன்
1) தேவநம்பிய தீசன் 2) வசபன் 3) தாதுசேனன் 4) மகாசேனன்

06. புத்சரண,தம்சரண,சங்கசரண என்னும் நூல்கள் பொலநறுவைக் காலத்தில் யாரால் எழுதப்பட்டன.
1) குமாரதாச 2) குருலுகோமி
3) வித்யாசக்கரவர்த்தி 4) மகாநாம

07. 1 ம் புவனேகபாகு காலத்தில் புனித தந்த தாதுவை அபகரித்தவர் யார்?
1) பாண்டியர் 2) 3ம் பராக்கிரமபாகு
3) சோழர் 4) 2ம் புவனேகபாகு

08. தெங்குச் செய்கைக்கு அனுசரனை வழங்கிய மன்னன் யார்?
1) 2ம் பராக்கிரமபாகு 2) 1ம் புவனேகபாகு
3) 4ம் பராக்கிரமபாகு 4) 3ம் விஜயபாகு

09. அடிமை அரச வம்சத்தின் முதல்மன்னர் யார்?
1) மகமுத் 2) இல்துத்மிஸ் 3) குதுபுதீன் 4) பல்பன்

10. சுல்தான் அரசு விழ்ச்சியடையப் பிரதான காரணம் யாது?
1) நிர்வாகச் சிக்கல் 2) உள்நாட்டுக்கலகம்
3) கொடுமையான ஆட்சி 4) தலைநகரம் மாற்றப்பட்டமை

11. பாமியன் புத்தர் சிலை காணப்படும் நாடு?
1) சீனா 2) அபுகானிஸ்தான்
3) மியன்மார் 4) மொங்கோலியா

12. நிலத்தை அனுபவிப்பதற்காக பொறுப்புக்களை நிறை வேற்றல் என்னும் முறைமை எங்கு காணப்பட்டது.
1) மானியமுறை 2) பிரபுக்களின் ஆட்சி
3) சர்வாதிகாரமுறை 3) ஆசியாவில்

தரப்பட்ட தேசப்படத்தின் உதவியுடன் 13 தோடக்கம் 16 வரையில் உள்ள வினாக்களுக்கு விடை தருக.



13. 4 எனக் குறிக்கப்பட்ட இலக்கத்தால் காட்டப்பட்ட துறைமுகம் எது?
1) ரோம் 2) வெனிஸ்
3) மாந்செயில்ஸ் 4) ஜெனோவா

14. 5 எனக் குறிகக்கப்பட்டுள்ள நகரம் எவ் நாட்டின் தலைநகரம்?
1) ஒல்லாந்து 2) இத்தாலி
3) ஸ்பெயின் 4) போர்த்துக்கல்

15. சிலுவைப் போரின் விளைவாக அழிக்கப்பட்ட நகரம் 3 என காட்டப் பட்டுள்ளது. அது
1) கொன்ஸ்தாந்திநோபிள் 2) ஜெருசேலம்
3 அலக்சாண்டியா 4) பலஸ்தீனம்

16. இத்தாலியின் தலைநகரம் ரோம் குறிக்கப்பட்டுள்ள இலக்கம்
1)1 2)2 3)3 4)6

17. மத்திய தரைக்கடலின் எல்லையாக அமைந்த கால்வாய்கள் எவை?
1) சுயெஸ்-பனாமா 2)சுயெஸ்-ஜிப்ரோல்டர்
3) மொசாம்பிக்-பனாமா 4)பனாமா-ஜிப்ரோல்டர்

18. பாப்பரசரைத் தலைவராகக் கொண்ட மதம் எது?
1) கிறிஸ்தவம் 2) புரட்டஸ்தாந்து
3) கத்தோலிக்கம் 4) இஸ்லாம்

19. கொன்ஸ்ரன்நன் டி பிரகன்சா என்னும்போர்த்துக்கேய தளபதி எவ் மன்னன் மேல் படையெடுத்துச் சென்றார்.
1) காசி நைனார் 2) புவிராச பண்டாரம்
3) பெரிய பிள்ளை 4) சங்கிலி

20. விக்கிரம ராஜசிங்கனை ஆங்கிலேயரிடம் பிடித்துக் கொடுத்த அதிகாரி யார்?
1) எகலப்பொல 2) கெப்பிற்றிப் பொல
3) மொல்லிக் கொட 4) பிலிமத்லாவ

21) இத்தாலி ஒன்றிணையமுன் எத்தனை பிரிவுகளாக காணப்பட்டது.
1) 4 2) 5 3) 6 4) 7

22. இலங்கையில் மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி முறை எந்த ஆண்டு ஆரம்பமானது.
1). 1833 2) 1921 3) 1931 4) 1947

23. மடுகல்ல சிரச்சேதம் செய்விக்கப்பட்ட இடம் யாது?
1) வெலிக்கட 2)கொழும்பு 3)போகம்பர 4)மாத்தளை

24. டொகுகாவா சோகுன் காலத்தில் ஜப்பானில் மூடிய கொள்கை பின்பற்றபடக் காரணம் என்ன?
1) அமெரிக்கரின் ஆதிக்கம் ஏற்பட்டதால்
2) தமது பொருளாதரத்தை வளர்ப்பதற்கு
3) மேஜிஜி சீர்திருத்தம் ஏற்பட்டதால்
4) கிறிஸ்தவ மத பரவலால் கலாசார தாக்கம் ஏற்பட்டதால்

25. இந்திய சுதந்திர போராட்டத்தில் மிதவாதிகளின் தோல்விக்கு காரணம் என்ன?
1) பிரித்தானிய அரசின் பாராமுகம்
2) வேண்டுகோள்கள் நிறைவேற்றப்படாமை
3) மத வேறுபாடுகள் தோன்றியமை
4) பலவீனமடைந்தமை

26. சர்வதேச சங்கம் உருவாக முன்னின்று உழைத்தவர் யார்?
1) வோஷிங்ரன் 2) வூட்றோ வில்சன் 3) சேச்சில் 4) ரூறுமன்

27. கிளாஸ் நோஸ்ட் ,பெடஸ் ரோய்கா என்னும் திட்டங்கள் யாரால் கொண்டுவரப்பட்டன
1) கொர்பச்சேவ் 2)லெனின் 3)டெய்சின் 4)சாகோசி

28. பனிப்போர் என்பதன் கருத்து யாது?
1) பனியுள்ள இடங்களில் போர் புரிவது
2) விண்வெளியில் யுத்தம் புரிவது
3) மறைமுகமாக யுத்தம்
4) தம்மை முதன்மை படுத்தும் முயற்சி

29. சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த பிரதேச அரசுகளின் எண்ணிக்கை யாது?
1) 15 2) 10 3)12 4)17

30. சரஜிவோ சம்பவம் எவ் யுத்தத்துடன் சம்பந்தப்பட்டது.
1) 1ம் உலகப்போர் 2) இந்திய சுதந்திரப் போர்
3) 2ம் உலகப் போர் 4) பிரான்சியர் புரட்சி

31. வடக்கு கிழக்கு மாகான சபையின் தலைநகர் எது?
1) கண்டி 2) திருகோணமலை
3) மட்டக்களப்பு 4) யாழ்ப்பாணம்

32. இலங்கையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கட்சி யாது?
1) வங்கா சமசமாஜக்கட்சி 2) கொம்மியூனிசக் கட்சி
3) ஜக்கிய தேசியக்கட்சி 4) தொழிலாளர் கட்சி

33. 1947 பொதுத் தேர்தல் முடிவுகளின் படி இலங்கை மந்திரி யார்?
1) D.S.செனநாயக்கா 2) ஸ்ரீமாவே பண்டாரநாயக்க
3) ஏ.இ.குணசிங்க 4) கொபல்லாவ

34. இலங்கை எப்பொழுது குடியரசாகியது.
1) 1947 2) 1972 3) 1978 4) 1931

35. ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கிய யாப்பு எப்பொழுது உருவாக்கப்பட்டது.
1) 1947 2) 1972 3) 1978 4) 1931

36. உலகில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் உரித்தாக வேண்டிய வசதிகளையும் வளங்களையும் வழங்குவதன் பொருட்டு உருவான நிறுவனம் எது?
1) UNFPA 2) UNDP
3) UNICEF 4) UNHCA

37. வளங்களை பங்கிடுதல்தொடர்பாக நாடுகளுள்ளேயும்,நாடுகட்கு இடையே யும் யுத்தங்களை தோற்றுவிக்கக் கூடிய பிரச்சனையாக கருதக்கூடியது எது?
1) நிலக்கரி வளப்பயன்பாடு
2) கனியநெய் பெற்றுக்கொள்ளல்
3) நதிநீரை பயன்படுத்தல்
4) காடுகளை வெட்டுதல்

38. இருகட்சி முறையின் சிறப்பியல்பாக கருதக்கூடியது எது?
1) பலம் வாய்ந்த அரசாங்கத்தையும்,எதிர்க்கட்சியையும் அமைக்கலாம்
2) இன அடிப்படையில் இரு கட்சிகள் பலம் பெற்றிருத்தல்
3) இரு கட்சிகளுள் ளும் பல்வேறு பிரிவுகள் காணப்படல்
4) மக்களது அரசியல் உரிமை மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்

39. மாகாண சபை முறை உருவாக்கப்பட்டு மாவட்ட சபை முறை நீக்கப்பட்ட ஆண்டு
1) 1978 2) 1987 3) 1972 4) 1948

40. இரண்டாம் குடியரசு யாப்பினை உருவாக்க மூலகர்த்தாவாக விளங்கியவர்.
1) R.பிரேமதாச 2) A.W.R.D.பண்டாரநாயக்க
3) J.R.ஜெயவர்த்தன 4) ரணில்விக்கிரமசிங்கட

**வரலாறு - II** **மூன்று மணித்தியாலங்கள்**

இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளை கொண்டது.முதலீம் வினாவிற்கும்,இரண்டாம் பகுதியில் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.

01. அ.



I.தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தில் பின்வருவனவற்றை குறித்துப் பெயரிடுக.

| | |
|---|---|
| 1.மல்வத்து ஓயா | 2.மன்னார் |
| 3.களனிகங்கை | 4.வாகரை |
| 5.ஹிக்கவெ | 6.கொத்மலை |
| 7.ஜம்புகோளபட்டனம் | 8.கதிர்காமம் |
| 9.கற்பிட்டி | 10.மகியங்கனை |

II.உலகப்படத்தில் பின்வருவனவற்றை குறித்து பெயரிடுக.

| | | |
|---|---|---|
| 1. விஜயநகர ராச்சியம் | 2. காபுல் | 3.பீகிங் |
| 4. [illegible] | 5. பிரித்தானியா | 6. பேள்துறைமுகம் |
| 7. [illegible] | 8.மொறோக்கோ | 9.மியன்மார் |
| 10.வோஷிங்டன் | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(08ஆம் பக்கத் தொடர்ச்சி...)

B



A



B

1. I இலங்கையில் உயர்கலையாக்கங்கள் இரண்டு என்ற படங்களில் காட்டப்பட்டுள்ளன. அவை யாவை எனக் காட்டுக.
II இதில் உள்ள உருவங்கள் எவை?
III 2ஆம் தலைநகர காலத்தில் இதில் இருந்து எவ் உருவம் நீக்கப்பட்டது.

2. I இவ் வடிவம் யாது?
II இது எவ் துறையுடன் தொடர்புடையது?
III இதிலுள்ள குறியீடுயாது?



3. இப்படத்தில் காட்டப்பட்டவர் யார்?
இவர் எத்துறையுடன் தொடர்புடையவர்?
இவரது கண்டு பிடிப்பு யாது?



4. அருகிலுள்ள படத்தில் இருப்பவர் யார்?
இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
இவர் வகித்த பதவி யாது?



பகுதி II

02.
1. அநுராதபுர காலத்தில் குளம் கட்ட மன்னர்கள் நிலத்தை பயன்டுத்திய 3 முறைகள் தருக.
2. பின்வரும் துறைகளில் புதைபொருள் ஆய்வுமூலம் கிடைத்த சான்றுகள் ஒவ்வொன்று தருக.
1.நீர்ப்பாசனம் 3.ஓவியம்
2.கட்டடம் 4.வைத்தியம்
3.ஆரியர் நீர்ப்பாசன துறைக்கு சேவையாற்ற வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது. இரண்டு காரணிகளுடன் விளக்குக.
4. ஆரியரின் இலங்கை வருகையை ஒழுங்காகக் கூறி காரணங்களையும் தருக.

03
1. பிரித்தானியர் இலங்கையை கைப்பற்ற முயன்றமைக்கு 3 காரணம் தருக.
2. பிரித்தானியர் மலையகத்தை கைப்பற்ற உதவிய 2 மகா அதிகாரிகள் யாவர்.
3.பிரித்தானியராட்சியால் இலங்கைக்குக் கிடைத்த 2 நன்மைகளை விளக்குக.
4. கோல்புறுக் ஆணைக்குழு முன்மொழிந்த சீர்திருத்தங்கள் 2 குறிப்படுக.

04.
1. சுதந்திரம் பெறும் முன் இலங்கையிலிருந்த அரசியல் யாப்பினையும், சுதந்திரம் பெற்ற பின் ஏற்பட்ட இரு அரசியல் யாப்புக்களின் பெயர்களையும் காலத்தையும் கூறுக.
2. இலங்கைக்கு உரித்தான அடிப்படை உரிமைகள் 4 தருக.
3. வாக்குரிமை துஸ்பிரயோகம் செய்யும் 2 சந்தர்ப்பங்கள் தருக.
4. ஜனநாயக நாட்டில் நிறைவேற்று அதிகாரம்முள்ள ஜனாதிபதி முறை இருப்பது சிறந்ததா என இரு காரணிகள் மூலம் விளக்குக.

05.
1. 13 ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில் எழுதப்பட்ட 3 நூல்கள் தருக.
2. இராசதானி தென்மேற்கே இடம் பெயர ஏற்பட்ட அரசியல் காரணம் 2 தருக
3. உலர் வலயத்திலிருந்து ஈரவலயத்திக்கு இடம் பெயர்ந்ததால் மக்களின் வாழ்க்கை முறை எவ்வாறு மாறியது
4. கோட்டே அமைக்கப்பட்ட காரணத்தையும் அமைந்த சூழலையும் கூறுக.

பகுதி III

06.
1. ஆரியர்கள் இந்தியாவினுள் வந்த பாதைகளையும்,எதுவரை பரவினர் எனவும் கூறுக.
2. பிரதான ஆரியகுடியேற்ற இராச்சியங்கள் எவை?
3. மௌரிய, குப்த அரசர்கள் ஒவ்வொருவரைக் கூறி அவர்களது சிறப்புக்களைத் தருக.
4. குப்தர் காலம் கலை வளர்ச்சிக்கு சிறந்து இருந்தது என்பதை நிரூபிக்குக.

07.
1. சுல்தான் பரம்பரை மன்னர்கள் மூவர்களைத் தருக.
2. இந்திய,அராபிய கலைகளின் கலப்பின் விளைவுகள் இரண்டு தருக.
3. விஜயநகர இராச்சியத்தின் சிறப்புக்கள் 2 தருக.
4. பௌத்தம் பரவிய இரு தென் ஆசிய நாடுகள் தந்து அதன் பரவலை விளக்குக.

08.
1. இன்று காணப்படும் முதலாளித்துவ னாடுகள் 2,சோசலிச நாடு 1 தருக.
2. உலகப் போர்களில் அமெரிக்கா ஈடுபட்டதற்கான காரணங்கள் எவை.
3. சோவியத் ரஸ்யாவின் திறந்த பொருளாதாரக் கொள்கை ஆரம்பிக்கப் பட்ட முறையை கூறுக.
4. அணிசேரா நாடுகளின் பிரதான கொள்கைகள் பற்றிக்கூறுக.

அடுத்த மாதிரி வினாத்தாள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெளிவரும்

# சமூக மேம்பாட்டில் பெண்களின் பங்கு உயர்த்தப்படுவது காலத்தின் தேவையாகும்

## பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி விழாவில் துணைவேந்தர்

சுன்னாகம்,நவ.17

சமூக மேம்பாட்டில் பெண்களின் பங்கு போதாமல் உள்ளது. பெண் கல்வி வளர்ச்சி கண்டுள்ளபோதும் சமூகத்தில் தீர்மானங் களை எடுக்கும் பெண்களின் வீதம் குறை வாக உள்ளது. பெண்களின் சமூக நிலை உயர்த்தப்பட்டு சமூக மேம்பாட்டில் அவர் களின் பங்கு அதிகரிக்கப்படவேண்டும். இது காலத்தின் தேவையாகிறது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன்.

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாட சாலையின் 185ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் பாட சாலை அதிபர் திருமதி கி.சிவராஜா தலைமை யில் நடைபெற்றபோது பிரதம விருந்தின ராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே துணைவேந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறிய தாவது:

பெண் கல்வி என்பது சமூக மேம்பாட் டுக்கான திறவுகோலாகும். கல்வி அறிவு மிக்க பெண்கள் இருக்கும் குடும்பத்தில் பிள்ளைகள் கல்வியில் மேம்படுகிறார்கள். அதன்வழி சமூகத்தினதும், நாட்டினதும் மேம்பாடு சாத்தியமாகிறது. தான் இழந்து போன கல்வியை தனது மகனுக்குக் கொடுக்க விரும்பிய அம்மாவின் ஆசியும் முயற்சியுமே என்னை உங்கள் முன்னிலையில் தலை நிமிர்ந்து நிற்க வைத்துள்ளது. பெண் கல்வி அதிகரிக்கும்போது சமூகம் எவ்வாறு மேம் பாடு காணும் என்பதற்கு யாழ்ப்பாணமே சிறந்த உதாரணமாகும்.

யாழ்ப்பாணப் பெண் கல்விப் பாரம்பரி யத்தில் சிறப்பான இடம் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலைக்குண்டு. 185ஆண்டுகளாகப் பெண் கல்வியளித்த இப்பாடசாலையின் வரலாற்றுத் தொடர்ச் சிக்குக் கௌரவம் அளிப்பது பெருமிதம் தருவதாகும்.

பாடத்திட்டம், பரீட்சை, பட்டம், தொழில் என்பனவற்றுக்கு அப்பால் ஒவ்வொரு பிள் ளையும் ஆளுமைமிக்கவர்களாக ஆக்க வேண்டியுள்ளது. பாட அடைவுக்கு அப் பால் பிள்ளையின் சமூக வளர்ச்சி, ஆளுமை மேம்பாடு என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. உலகம் பற்றிய அறிவை ஊட்டி, உலக விவகாரங்களில் அதன் பரி மாணங்களை விளங்கிக்கொள்ளக்கூடிய நிலையை உருவாக்கவேண்டியுள்ளது. பிள்ளைகளின் நாளைய உலகத்தைக் கட்டி யெழுப்ப வேண்டிய கடப்பாடு எம் அனை வருக்கும் உரியதாகும். - என்றார்.

### ஆசிரியர்கள் மாணவர் உள்ளங்களில் இடம்பிடிக்கவேண்டும்

கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட எழுத்தாளர் திருமதி யோகேஸ்வரி சிவப் பிரகாசம் உரையாற்றும்போது கூறியதாவது:

ஒரு பிள்ளையின் ஆளுமை விருத்தி யில் பாடசாலையே முக்கிய பங்கு வகிக் கிறது. மாணவர்கள் மனதில் நல்ல விதை களை விதைக்கும்போதே நாம் நல்ல அறு வடையைப் பெறமுடியும். ஆசிரியர்கள் முதலில் மாணவர்களது உள்ளங்களில் இடம்பிடிக்கவேண்டும். அதன்பின் அவர் கள் கூறும் எல்லாக் கருத்துகளும் மாணவர் கள் மனதில் ஆழமாகப் பதிந்து அவர்களைச் சிறந்த ஆளுமை படைத்தவர்களாக மாற்றி விடும். ஆசிரியர்கள் இதனை உணர்ந்து கற் பிக்கும்போது அவர்களது கற்பித்தல் வெற்றி பெறுகிறது - என்று குறிப்பிட்டார்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரி சில்களை வேம்படி உயர்தரப் பாடசாலை ஆசிரியை திருமதி கௌரி சண்முகலிங்கன் வழங்கினார். துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் 'பன்மகள்' 185ஆவது ஆண்டு மலரைவெளியிட்டுவைத்தார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (அ-38)



காரைநகர் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வில் பிர தம விருந்தினராகக் கலந்துகொண்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் திருமதி ம.வசந்தகுமார் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (29)

# கலந்துரையாடல்

சுன்னாகம்,நவ.18

வலி.தென்மேற்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங் கங்களுடனான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக் குப் பிர தேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து முதியோர் சங்க உறுப்பினர் களையும் கலந்துகொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் அருந்தவராசா கேட்டுள்ளார். (202-100)

# உதவிக் கொடுப்பனவு

வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 13 குடும் பங்களுக்குச் சுயதொழில் முயற்சிக் கொடுப் பனவும் 4 குடும்பங்களுக்கு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவும் வழங்கப்பட் டுள்ளது.

இத் தகவலைப் பிரதேச செயலக சமூக சேவை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் செல் லத்தம்பி சுரேந்திரா தெரிவித்தார். (202)

# இருபாலை தெற்கு மாதர் சங்கத்துக்கு புதிய அங்கத்தவர்கள்

கோப்பாய்,நவ.18

இருபாலை தெற்கு மாதர் அபிவிருத் திச் சங்கத்துக்கான புதிய அங்கத் தவர்கள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

சங்கத்தின் பல்வேறு நலத்திட்டப் பணி கள் முன்னெடுப்பதற்கான நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது வழங்கப்பட்டுவரும் சுயதொழிலுக்கான சுழற்சிமுறைக் கடன் திட்டம் மேலும் பரவ லாக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-72)

# வலி.தெற்கு பிரதேச சபையின் வாசிப்பு மாதப் போட்டி முடிவுகள்

சுன்னாகம்,நவ.18

வலி.தெற்கு பிரதேசசபை, தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலை மாணவர் களிடையே பல்வேறு போட்டிகளை நடத் தியிருந்தது.

அப்போட்டிகளில் வெற்றிபெற்றவர் களின் விவரம் வருமாறு:

**கட்டுரை**

*ஆரம்பப்பிரிவு:* த.லவண்ணியா (உடு வில் மகளிர் கல்லூரி), பு.நிரோஷ்கண்ணா (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியா சாலை), சி.பிரபாலினி (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை)

*கீழ்ப்பிரிவு:* சி.ஹம்சாயினி (யா/இணு வில் இந்துக் கல்லூரி), சி.கோகுலதாஸ் (யா/ மயிலணி சைவ ம.வி), ச.பிரணவி (யா/உடு வில் மகளிர் கல்லூரி).

*மத்தியபிரிவு:* செ.ஷாளினி (யா/உடு வில் மகளிர் கல்லூரி), அ.சாம்பவி (யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.), ஜெ.பாரதி (யா/மயிலணி சைவ ம.வி.).

*மேற்பிரிவு:* த.கல்யாணி (யா/இணு வில் மத்திய கல்லூரி), பா.யசோதா (யா/இணு வில் மத்திய கல்லூரி), ச.குயின்சா (யா/ இராமநாதன் கல்லூரி)

**வினாடி வினா**

உடுவில் மகளிர் கல்லூரி அணி, இணு வில் மத்திய கல்லூரி அணி, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி அணி.

**வாசகர்களுக்கான பொது அறிவு**

தனுஷ்யா வீரசிங்கம் (மாணிக்கர் வீதி, இணுவில்), ச.சக்தி தர்ஷினி (கந்தரோடை சுன்னாகம்), எஸ்.பிரணவசொரூபி (ஏழாலை மேற்கு ஏழாலை). (202-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் – சுவிற்சர்லாந்து

**Jaffna Central College**

Old boys Association – Switzerland

Contact address: J.C.C Ex Schüler Swiss, Postfach – 102, 4716 – Welschenrohr, Swiss.

Email jccoba-swiss@hotmail.com ☎- 078 908 52 03

## யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் – சுவிற்சர்லாந்து

# வாழ்த்துகின்றோம்

## 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து யாழ்.மத்திய கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்த மாணவர்களான

பு.சஞ்ஜீவராம் ந.கனுஷாந் ஜெ.டிஸ்மன் செ.சாருஜன் யோ.தேவராஜ் நி.ஜீவபிரகாஷ்

பா.காந்தருபன் கு.கௌரீசன் யோ. கோகுலதீபன் த.சொருபன் உ. பிரியலக்ஸன் கி.கோபிகன்

கே.நிக்ஸன் செ.கஜிந்தன் எ.கொலின்துஷாந்தன் த.கவிதரன் சி.கனீஸ்டலா ச. பரனிகா

ஜெ.ஜெ.'.பான்சி உ.கஜித்தா த. விதுஷா ய.நிசாயா ஜெ.சுவஸ்திகா வே.கெலன்கீர்த்தனா

ஆகியோரைச் சுவிஸ் யாழ்.மத்திய கல்லூரிப் பழையமாணவர் சங்கத்தின் சார்பில் வாழ்த்துவதுடன், இம் மாணவர்களுககுக் காலநேரம் பாராது கல்விக்கு வளமூட்டிய யாழ் மத்திய கல்லூரி அதிபர், ஆரம்பப் பிரிவு உதவி அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இம்மாணவர்களுக்கான பணவைப்புச் சான்றிதழ் வழங்கி பதக்கம் அணிவித்து மதிப்பளிக்கும் நிகழ்வு நாளை (19.11.2008) புதன்கிழமை மு.ப.10 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் மதிப்பிற்குரிய அதிபர் திரு.செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

**இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.**

தாயகத்தில் என்றுமில்லாத வகையில் மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் தமிழ்ப் பிரதேசம் இருக்கின்ற இந்நிலையிலும், வன்னிமக்களின் துயரங்கள் நிறைந்த சுமைகளின் மத்தியிலும் இந்நிகழ்வினை இன்று நடத்துவது கல்வியில் சிறப்பாகச் செயற்பட்ட மாணவர்களை உரிய காலப்பகுதியில் மதிப்பளித்து உற்சாகப்படுத்தவேண்டும் என்பதற்காகவே. இவ்வாறான சூழ்நிலைக்கு மத்தியிலும் மாணவர்களின் கல்விப் பெறுபேறுகள் சிறப்பாக அமைந்திருப்பது பெருமையளிக்கின்றது.

மாணவர்கள் அறிவியல் துறையில் ஏற்பட்டிருக்கும் ஏற்ற இறக்கங்களை நன்கு அறிந்து அதற்கேற்ற வகையில் தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டும். கல்வியினை முன்னெடுத்துச் செல்வதில் மாணவர்களுக்கு இருக்கின்ற இடையூறுகள் அனைத்தையும் நாங்கள் நன்கு அறிவோம். எனினும் எவ்வாறான தடைகள் இருப்பினும் அதற்கு முகம்கொடுத்து கல்வியில் வெற்றி பெறவேண்டுமென அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம். தொடர்ந்து வருகின்ற காலங்களிலும் தேசிய நிலையில் சிறப்பாகச் செயற்படும் மாணவர்களையும், எம்கல்லூரி மாணவர்களையும் எமது சங்கம் மதிப்பளித்து ஊக்கமளிக்கும் என்பதனையும் , அதன் அடிப்படையில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய நிலையில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான 10000ரூபா பணவைப்புச் சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வு அவர்கள் கலவி கற்கும் பாடசாலையில் நடத்துவதற்கான ஒழுங்குகள் எமது கல்லூரி அதிபர் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நா.விஜயகுமார்**
தலைவர்,
யாழ்.மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
சுவிற்சர்லாந்து.

மின்னஞ்சல் jccoba-swiss@hotmail.com
இணையமுகவரி www.jccoba.ch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன உலகோடு மாணவர்களையும், சமூகத்தையும் இணைத்துவரும் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய கணினிக் கற்கை நிலையம்

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இயங்கிவரும் கணனி கற்கை நிலையத்திற்கு இணைய வசதி கிடைத்ததைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தினருக்கு, இணையத்தின் ஊடாக கற்றல் வசதிகள் கிடைத்து வருகிறது. கடந்த வருடம் ஜனவரி மாதம் இவ்வித்தி யாலயத்திற்கு அரசால் அமைக்கப்பட்ட கணனி நிலையம் கடந்த மே மாதம் தொடக்கம் இணைய வசதியைப் பெற்றுள்ளது.




பாடசாலை நேரத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் எந்தவிதமான கட்டணமும் இன்றி கணனிகளைப் பற்றிய பயிற்சியையும் கணனி ஊடான கற்றல் செயற்பாட்டையும் மேற்கொள்ள இந்நிலையம் உதவுகின்றது. அத்துடன் பாடசாலை தவிர்ந்த மாலை நேரத்திலும், விடுமுறை காலத்திலும் பாடசாலை சமூகம் சார்ந்த ஏனையோரும் கணனிப் பயிற்சியையும், கணனி ஊடான கற்றல் செயற்பாட்டையும் மேற்கொள்ளவும் உதவுகின்றது.

கடந்த வருடம் 25 மாணவர், சிறுவர்களும் மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலய ஆசிரியர்கள் 15 பேருக்கும், நாகர்கோவில் மகாவித்தியாலய ஆசிரியர்கள் 8 பேருக்கும் கணினி ஆரம்பப் பயிற்சியை வழங்கியுள்ளது. அத்துடன் தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை ஆசிரியர்கள், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய ஆசிரியர்கள் ஆகியோரும் இந்நிலையத்தைப் பயன்படுத்தி கணனிப் பயிற்சியைப் பெற்றுள்ளார்கள்.

இவ்வாண்டு (2008) ஜனவரி மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை 75 மாணவர், சிறுவர்களுக்கான கணனி ஆரம்பப் பயிற்சியையும் 10 மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பயிற்சியையும், தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவர்கள் 9 பேருக்கு OLICT பாடத்தின் செய்முறைப் பயிற்சியையும் வழங்கியுள்ளது.

தற்போது இந்நிலையத்தில் பருத்தித்துறை கலட்டி றோ.க.த.க. பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை உயர்தர மாணவர்கள், பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் கல்வியமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் பயிற்சிகளையும், கணனி ஆரம்பப் பயிற்சியையும் கற்று வருகின்றார்கள். இப்பயிற்சிகள் மாதாந்தம் 50 மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெறுகின்றன.

பருத்தித்துறை நகரில் இணைய வசதியை முதன்முதலில் அறிமுகப்படுத்திய பெருமை வேலாயுதம் மகாவித்தியாலய கணனிக் கற்கை நிலையத்தையே சாரும். இணைய வசதியைப் பெற்றுக்கொள்ள மிகக் குறைந்த கட்டணமாக ஒரு மணி நேரத்திற்கு 40 ரூபா என்ற அடிப்படையில் வழங்கி எமது சமூகத்தை இன்றைய நவீன உலகிற்கு ஏற்றவாறு இணைத்து வருகின்றது. சராசரியாக மாதத்தில் 40 மணிநேரம் இவ்வசதி வழங்கப்பட்டு வருகிறது.

பாடசாலைக் கல்விக்கான மென்பொருள் ஆக்கம் தொடர்பான மாகாண மட்டப் போட்டியில், 2007இல் இவ்வித்தியாலய ஆசிரியரான க.குகநேசன் மற்றும் மாணவர்களான பே.பிறேம்குமார், ம.அன்ரனி டேவிட்ராஜா, த.சிவகரன் ஆகியோர் பங்குபற்றி, அதற்கான சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்கள்.

இந்நிலையத்தின் வளர்ச்சிக்குப் பழைய மாணவர் சங்கத்தினரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் உதவிகள் வழங்கி வருகின்றார்கள். கணனிக் கற்கை நிலையச் செயற்பாடுகளுக்கு உந்துசக்தியை ஏற்படுத்தும் நோக்கமாக அவ்வப்போது பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையினர் தொடர்புகொண்டு பேருதவி புரிந்து வருகின்றார்கள்.

## காவலன்

இந்நிலையத்தில் நடத்தப்படுகின்ற பயிற்சிநெறிகளுக்கு இவ்வித்தியாலய ஆசிரியர்களான க.குகநேசன், சி.கதிரமலை, வீ.சேந்தன் மற்றும் புகைப்படக் கலைஞரான ச.திருச்செல்வம் ஆகியோர் வளவாளர்களாகச் சேவையாற்றி வருகின்றார்கள்.

இந்நிலையத்திற்கு முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டு சிறப்பான முறையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



மானிப்பாய் பனை தெ.வ. அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்ட சண்டிலிப்பாய் சிவசக்தி முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் மக்கள் வங்கி முகாமையாளர் க.சிறிதரன் மங்கள விளக்கேற்றுவதையும், சங்கத்தின் பொதுமுகாமையாளர் க.சற்குணலிங்கம் அருகில் நிற்பதையும் - மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.




யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அண்மையில் சாரணர் இயக்கத்தின் 92ஆம் ஆண்டு நிறைவையொட்டி மலர் வெளியீடு நடைபெற்றது. முதற்பிரதியை யாழ்ப்பாணம் வலய கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வழங்கி வைக்க, காங்கேசன்துறை மாவட்ட சாரண உதவி ஆணையாளர் ப.அஜித்குமார் பெற்றுக் கொண்டார். மேடையில் கல்லூரி அதிபர் செ.பத்மநாதன், வடமாகாண சாரணர் ஆணையாளர் த.நா.போஜன், பாடசாலை குழுச் சாரணர் தலைவர் போ.உல்லாசனன் ஆகியோரைக் காணலாம்.



ஈழத்தமிழர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்தும், இலங்கையில் போரை நிறுத்தக் கோரியும் திரைப்பட நடிகர் விஜய் மற் றும் அவரது ரசிகர்களும் சென்னையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நடிகர் விஜய், அவரது தந்தையார் எஸ்.ஏ.சந்திரசேகரன், தாயார் எஸ்.சோபா, இயக்குநர் பேரரசு மற்றும் விஜய் ரசிகர் மன்ற நிர்வாகிகள் மேடையில் அமர்ந்திருப்பதையும், போராட்டத்தில் கலந்துகொண்ட ரசிகர்களையும் படங்களில் காணலாம்.









இலங்கையில் இடம்பெற்றுவரும் இனப்படுகொலையைக் கண்டித்தும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நியூசிலாந்தில் [illegible] பெற்றது. நியூசிலாந்து தமிழ் அமைப்புகளின் ஒன்றியத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்வு [illegible].

நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்





அன்னையின் மடியில்:
22 - 09 - 1988

ஆண்டவன் அடியில் :
19 - 10 - 2008

கார்மேகமாய் கண்களில்
நீர் சொரிய வைத்த – எங்கள்
கீர்த்திகாவே!
நால் ஐந்து ஆண்டுகள்
நம் அன்பில்
நனைந்துவிட்டு – இன்று
நினைவுகளைச் சுமக்கவிட்டு
நீ நீங்கிப் போனதேனோ?
பாசம் தந்து இங்கு
வாசம் வீசிய மலர்வாடி
தேசம் விட்டு எங்கோ
ஓடிப்போனதேனோ??
வாழ்வின் வனப்புகளை
வழுக்கிவிட்டு மண்ணில்
வீழ்ந்து போனதேனோ?
துவண்டு போன உள்ளத்தில்
மீண்டும் புத்துயிர் தர – நீ
மறுபிறவி எடுத்தேனும்
சிறுமியாய் நம் உறவில்
சேராயோ?
பற்றுடனே அருகிருந்து பணிகள் செய்தோம்
பசியாற உணவூட்டிக் காத்தபோதும்
குறை என்ன கண்டாயோ – அக்கா
ஆற்றொணாத் துயர் உற்றோம், குழறுகின்றோம்
பெற்றெடுக்க அருள் புரிந்த தெய்வமே
இந்தப் பெரும் துயர்தர – ஏன் நினைத்தாய்
பற்றியெரிகின்ற நெருப்பிடையே நீ சாம்[illegible]
பாவி எம் நெஞ்சு எரியுதிங்கே என் செய்வோம்.



## செல்வி
# கீர்த்திகா புலேந்திரன்

கடந்த 19.10.2008 அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (18.11.2008) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் அன்னாரின் ஆத்மசாந்தி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வைரவர் கோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(79782)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது ஊனினை உருக்கி கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கு உயிர்தந்தவர் அமரர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி

## செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அஞ்சலியுரை

இணுவில், நவ.18

தனது ஊனினை உருக்கிக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கு உயிர்தந்தவர் அமரர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி. அவரது காலத்திலேயே கொழும்புத் தமிழ்ச் சங்கம் பெரும் பரிணாம வளர்ச்சியைக் கண்டது. இவ்வாறு தெரிவித்தார் துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெற்ற அமரர் கந்தசுவாமியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு இணுவில் மத்திய கல்லூரி அதிபர் அ.சதானந்தன் தலைமை வகித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆறு.திருமுருகன் தெரிவித்தவை வருமாறு:-

கந்தசுவாமி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஆற்றிய பணிகளில் முதன்மையானது அங்கு ஏற்படுத்திய பெருமளவு நூல்களைக் கொண்ட நூலகம் ஆகும். கொழும்பில் வாழ்ந்த முதிய தமிழறிஞர்கள் மரணமாகும் போது அவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்கள் பயன்படுத்திய நூல்களைப் பெற்றுக்கொண்டதுடன் முன்னாள் தமிழக முதலமைச்சர் எம்.ஜி இராமச்சந்திரன் கொழும்பிற்கு வந்த வேளையில் அவரிடம் வேண்டுகோள் விடுத்து 5000 நூல்களைப் பெற்றுக்கொண்டு தமிழ்ச் சங்க நூலகத்தை வளர்த்தெடுத்தார். உடல் தளர்ச்சி அடைந்த நிலையிலும் அண்மையிற் சிலப்பதிகார விழாவைப் பெரியளவில் நடத்தியமை அவரது விடாமுயற்சியை எடுத்துக் காட்டுகின்றது- என்றார்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி உரையாற்றும் போது, இவரது பணிகளை ஆசிரியப்பணி, அரசியற்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி எனப்பல வகைகளாக நோக்கலாம். இணுவில் சைவ மகாஜனா தொடக்கம் கொழும்பு றோயல் கல்லூரி வரை இவரது ஆசிரியப் பணி பரந்தது. அரசியலில் தந்தை செல்வாவின் வலக்கரமாகத் திகழ்ந்தவர். 1961 ஆம் ஆண்டு இடம்பெற்ற சத்தியாக் கிரகப் போராட்டத்தின் போது வீடுவீடாகச் சென்று இளைஞர்களைச் சேர்த்துப் போராட்டத்தில் ஈடுபடுத்தியவர். உடுவில் கிராம சபைத் தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுப் பல சமூகப் பணிகளை முன்னெடுத்தவர்- என்றார்.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் உரையாற்றுகையில், தொடர்ந்து 25 வருடங்கள் தமிழ்ச் சங்கச் செயலாளராகப் பணியாற்றிய கந்தசாமி ஈழத்து, தமிழகத்து அறிஞர்களை அழைத்து விழாக்களை நடத்தியதோடு மாணவர்களுக்கிடையே பல்வேறு போட்டிகளையும் நடத்தினார் என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவிலே முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி க.தேவராஜா, பேராசிரியர் அ.சண்முகதாஸ், செ.இலகுநாதன் பண்டிதை திருமதி வே.கணேசபிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்.

(அ-55)

# உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ.18

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு கணணியும், புகைப்படப்பிரதி இயந்திரமும் வழங்கப்பட்டன.

பாடசாலை பெற்றோர்கள் சார்பில் கணணியும், நோர்வே வாழ் பாடசாலை பழைய மாணவர்கள் சார்பில் புகைப்படப் பிரதி இயந்திரமும் வழங்கப்பட்டன.

பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் மற்றும் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோரை பாராட்டி பாடசாலை சமூகத்தினர் நடத்திய கௌரவிப்பு விழாவில் இப் பொருள்கள் வழங்கப்பட்டன.

புலம்பெயர்ந்த பாடசாலை பழைய மாணவர்கள் வழங்கிய நிதி உதவியுடன் அண்மையில் பாடசாலைக்கு மின் இணைப்பு கிடைத்ததையடுத்து கணணி, புகைப்படப் பிரதி இயந்திரம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(202-207)




வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவை நடத்திய கலாசார விழாவில் ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஸ்ரீபதி மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். நேற்றைய உதயனில் தவறுதலாக யாழ். மேலதிக அரச அதிபர் பரிசில் வழங்குகின்றார் எனக் குறிப்பிடப்பட்டு விட்டது.

# இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு நவ.18

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று 4 மணிக்கு குருநகர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழகமும் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக 'ஏ'அணியும் மோதவுள்ளன.

(86-160)

# இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு அதிபர் சேவையிலிருந்து 328 பேர்

அச்சுவேலி, நவ.18

இலங்கை அதிபர் சேவை தரம்Iஇல் இருந்து 328 பேர் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்IIIபதவிக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களைத் தெரிவு செய்வது தொடர்பான விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 45 வீதம் ஆசிரியர்களில் இருந்தும் 25 வீதத்தினர் பட்டதாரிகளில் இருந்தும் 30 வீத மாணவர்கள்இலங்கை அதிபர் சேவை தரம்I இல் இருந்தும் தெரிவு செய்யப்பட வேண்டும் என வரைறை செய்யப்பட்டுள்ளது.

30 வீதமானவர்கள் அதிபர் சேவையில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டியது என்ற வகையில் 328 பேர் கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவர்கள் போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பவற்றின் மூலமே தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கல்வி அமைச்சு கோரவுள்ளது. இதற்கான அனுமதியை இலங்கை பொதுச் சேவைகள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

போட்டிப் பரீட்சையில் 50புள்ளிகளுக்குக் குறையாத நிலையில் பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

நேர்முகப் பரீட்சையில் அதிபர் சேவைக் காலத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு 8 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். அதிபரின் சேவையில் தகுதிக்காலம் முதல் மூன்று வருடங்களுக்கும் சேவைக்கான புள்ளிகள் வழங்கப்பட மாட்டா.

1986 ஆண்டில் இருந்து அதிபர் சேவையில் இருந்து குறித்த விகிதாசார நிலையில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படவில்லை. அந்த வகையில் கணிசமான தொகையினர் பதவி உயர்வை எதிர்பார்த்த நிலையில் உள்ளனர்.

இது தொடர்பாக இலங்கை தரம் பெற்ற அதிபர்கள் சங்கத்தின் மூத்த ஆலோசகர் ஏ.சி.எம் ஜவஹர் ஷா ''சங்கத்தின் நீண்டநாள் கோரிக்கை கைகூட விருக்கின்றது. கூடிய விரைவில் நியமனம் வழங்கப்படவிருக்கின்றது'' எனத் தெரிவித்தார்.

(202-11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பில் இன்று இடம்பெறும்
தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு
விழாவில் "கல்வி மாணி" பட்டம் பெறும்
ஆசிரியத்தொழிலில் அனுபவமும், ஆற்றலும்,
மிகச் சிறந்த கல்வியாளர்களை உருவாக்கியவருமான

**திரு.த.வரதராஜா**

B.Ed Sp.Trd.(Maths), S.L.T.S I

அவர்களை மனதார பாராட்டுவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். அவரது மகத்தான சேவை எம் பிரதேசத்தில் தொடரவும் பட்டங்கள் பல பெற்று சிறப்புறவும் அரசகேசரி விநாயகனின் திருவருள் கிடைப்பதாக.

சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்கள் குடும்பம்
அரசகேசரி பிள்ளையார் கோவில், நீர்வேலி.

## மனதார வாழ்த்துகின்றோம்



கொழும்பில் இன்று இடம்பெறும்
தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு
விழாவில் "கல்வி மாணி" பட்டம் பெறும்
எமது சக ஆசிரிய நண்பனும்
கணித ஆசிரியருமான

**திரு.த.வரதராஜா B.Ed**

அவர்களை பாராட்டுவதுடன் மேலும்
பட்டங்கள் பல பெற்றுச் சிறப்புற
மனதார வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்,
யாழ்.மத்திய கல்லூரி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பில் இன்று இடம்பெறும்
தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு
விழாவில் "கல்வி மாணி" பட்டம் பெறும்
எமது நிறுவன அதிபரும்
தனித்துவமான கணித ஆசானுமாகிய

**திரு.த.வரதராஜா**

B.Ed Sp.Trd.(Maths), S.L.T.S I

அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும்
சிறப்புற அருள் புரியுமாறு
இருபாலை கற்பகவிநாயகரை
இறைஞ்சுகின்றோம்

ஆசிரியர்களும், மாணவர்களும்,
ஆளணியினரும்

The Express Institute
Irupalai, Kopay.



## நீங்காத நினைவலைகள்



**அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர்**

01. யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கரவெட்டி.
02. சுருக்கெழுத்துக்கழகம், வதிரி, கரவெட்டி.
03. உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள், தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.
04. பாரதிதாசன் நூலகம்,அல்வாய்.
05. அகில இலங்கை இளங்கோ கழகம்.
06. மாணவன் வேல் நந்தகுமார்
07. 10A மாணவர்கள் யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
08. நண்பர்கள்.

**அமரர் க.அருளானந்தன் (B.A.Dip in Mass.com)**

(முன்னாள் ஆசிரியர் கிளி./இந்துக் கல்லூரி, யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை, செய்தி ஆசிரியர், உதவி ஆசிரியர், வீரகேசரி, ஈழநாடு, நாடக ஆய்வாளர்)

*வெண்ணெய் திரண்டு*
*வரும் வேளையிலே*
*தாழி உடைந்தமை போல*
*அன்புடன் அறிவூட்டி*
*அவனியிலே வளர்த்து வந்து*
*பாதி வழியினிலே பரிதவிக்க விட்டு*
*பரமனவன் பாதம் சென்றீர்களோ?*
*உங்கள் இலட்சியங்களை*
*நாங்கள் நிறைவேற்றிடுவோம்.*
*என்றும் பாதுகாவலனாக இருந்து*
*எம்மை வழிநடத்துங்கள்*
*எமது அன்புத் தெய்வமே.*

**பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர்**

01. யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கரவெட்டி.
02. தியாக ஸ்ரீ.சோமகந்தராஜக் குருக்கள்
03. பாரதிதாசன் நூலகம், அல்வாய்.
04. வெளிவாரிப்பட்டப்படிப்புகள் அலகு, போரூட், தம்பசிட்டி.
05. 2004 A/L Maths மாணவர்கள் பருத்தித்துறை, கொழும்பு.
06. மாணவன் பகீரதன்

**நன்றி கூறுகின்றோம்**

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு விரைந்து வந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், கல்விச் சமூகத்தினர் அனைவருக்கும் என்றும் எமது நன்றிகள்.

மற்றும் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி, தொலைநகல், தந்திகள் மூலம் அனுதாபங்கள், ஆறுதல்கள் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்கள், பத்திரிகைகளில் பிரசுரித்தவர்களுக்கும் செய்தியாக பத்திரிகைகளில் பிரசுரம் செய்த யாழ்ப்பாணம், கொழும்பு பத்திரிகை நிறுவனங்களுக்கும் இன்றுவரை எமது இல்லம் தேடி வந்து ஆறுதல் கூறிக் கொண்டிருக்கும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

[illegible]
[illegible] மேற்கு, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

சி/555364)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வீதி புனரமைப்பு

நல்லூர்,நவ.18

நல்லூர் பிரதேச சபை தனது சொந்த நிதியில் இருந்து குட்செட் வீதியின் ஒரு கிலோ மீற்றர் நீளமுள்ள வீதியைப் புனரமைத்துள்ளது. இதற்கென 10 லட்சம் ரூபா ஒதுக்கிடப்பட்டது.

அதே சமயம் 10 லட்சம் ரூபா கமநெகும நிதி ஒதுக்கீட்டில் கிடைக்கப்பட்ட தொகையைக் கொண்டு குமர கோட்டம் வீதி கால்வாய் புனரமைப்பு வேலைகளை உடன் ஆரம்பிக்கவுள்ளதாகவும் நல்லூர் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் தெரிவித்தார். (202-111)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.08.2007 ற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ்க குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.பிரதான வீதி - 104 | | மக்கள் வங்கி, யாழ்/கன்னாதிட்டி - 284 |
| 2 | சேவை நிலையம், உரும்பிராய் | | |
| 3 | சாவகச்சேரி - 110 | | |
| 4 | சேவை நிலையம், கொடிகாமம் | | |
| 5 | யாழ்.பல்கலைக்கழகம் - 162 | | |
| 6 | சேவை நிலையம், திருநெல்வேலி | 06.12.2008 | |
| 7 | யாழ்.கன்னாதிட்டி - 284 | 07.12.2008 | |
| 8 | சேவை நிலையம், இணுவில் | 13.12.2008 | |
| 9 | யாழ்.ஸ்ரான்லி வீதி - 030 | 14.12.2008 | |
| 10 | சேவை நிலையம், மானிப்பாய் | 15.12.2008 | |
| 11 | காங்கேசன்துறை - 031 | & | |
| 12 | சேவை நிலையம்,மல்லாகம் | 16.12.2008 | |
| 13 | அச்சுவேலி - 107 | | |
| 14 | சங்கானை - 108 | | |
| 15 | சுன்னாகம் - 109 | | |
| 16 | வல்வெட்டித்துறை - 141 | | |
| 17 | நெல்லியடி - 106 | | |
| 18 | பருத்தித்துறை - 285 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொதுமுகாமையாளர்
வடவலயம்,
மக்கள் வங்கி பிரதேச காரியாலயம்
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/555359)

## முன்பள்ளிச் சிறார்களுக்கு இலவச பால் வழங்கல்

சுழிபுரம்,நவ.18

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள முன்பள்ளிச் சிறார்களுக்கு இலவச பால் வழங்கும் செயற்பாடு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலவச பாலை மேற்படி செயலகத்தினர் தினமும் காலை 8.30 மணிக்கு முன்பள்ளி நடைபெறும் இடங்களுக்குச் சென்று ஆசிரியர்களிடம் வழங்கி வருகின்றனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் ஆயிரத்து எண்ணூறு முன்பள்ளிச் சிறார்கள் இலவசபால் பருகும் வாய்ப்பைப் பெற்றுள்ளார். (201-28)

## சாரணத் தலைவர்களுக்கான கலைக்கூறு - 1 பயிற்சி

யாழ்ப்பாணம்,நவ.18

சாரணத் தலைவர்களுக்கான பயிற்சி - 1 கடந்த 12ஆம் திகதி புதனகிழமை யாழ். மத்திய கல்லூரியில் வடமாகாண சாரண ஆணையாளர் நா.போஜன்ற் தலைமையில் நடைபெற்றது. வட மாகாணத்தைச் சேர்ந்த 27 சாரணர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.

சாரணத் தலைவர்களுக்கான பயிற்சிகளை தலைவர் செல்வநாயகம், உதவிப் பயிற்றுநர் தலைவர் என்.சவுந்தரராஜன், மாவட்ட உதவி ஆணையாளர் கலாநிதி தில்லைநாதன் ஆகியோர் அளித்தனர். அதனைத் தொடர்ந்து சாரணர்களுக்கான விசேட தகுதிகாண் பயிற்சி வழங்கப்பட்டது. (201-325)

## வீட்டு லோத்தர் சீட்டிழுப்பில் மூவர் தெரிவாகினர்

கோப்பாய்,நவ.18

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 2006 ஜூலை - டிசெம்பர் வரையான காலப்பகுதியில் சமுர்த்தி முத்திரைபெற்ற மூன்று பயனாளிகளுக்கு வீட்டு லொத்தர் சீட்டிழுப்பில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இருபாலை கிழக்கைச் சேர்ந்த தம்பன் மதனன், உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த மார்க்கண்டு பாலச்சந்திரன், கோப்பாய் வடக்கைச் சேர்ந்த அம்பலவாணர் பரமேஸ்வரன் ஆகிய மூவருமே தெரிவு செய்யப்பட்டவர்களாவர். (202-72)

## பயிற்சிப் பட்டறை நிலையம் மாற்றம்

யாழ்ப்பாணம்,நவ.18

மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் மாகாண பொதுநிர்வாக செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கான ஒழுக்காற்று மற்றும் நிர்வாக நிதி நடைமுறைகள் தொடர்பாக நாளை புதன்கிழமை தொடக்கம் 25ஆம் திகதி வரை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவிருந்த பயிற்சிப்பட்டறை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். [illegible] பாளர் அறிவித்துள்ளார். (201)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பில் இன்று இடம்பெறும் தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு விழாவில் "கல்வி மாணி" பட்டம் பெறும் எனது ஆசானும் எனது பிள்ளைகளின் ஆசானும் மட்டுமல்லாது எமது பிரதேசத்தில் நான்காவது தசாப்தத்தை நோக்கிய கல்விப்பணியில் அரும்பணியாற்றும்

**திரு.த.வரதராஜா**
B.Ed Sp.Trd.(Maths), S.L.T.S I

அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் சீரும்சிறப்புடனும் வாழ கற்பக விநாயகன் அருள்பாலிப்பானாக.

பா.செல்வசேனக் குருக்களும் குடும்பத்தினரும்
இருபாலை கற்பக விநாயகர் தேவஸ்தானம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பில் இன்று இடம்பெறும் தேசிய கல்வி நிறுவகத்தின் ப்ட்டமளிப்பு விழாவில் "கல்வி மாணி" பட்டம் பெறும் கல்விப்பணியில் அரியதோர் சாதனை படைத்து எமது பிரசேதத்தில் மட்டுமல்லாது யாழ்மாவட்டத்திலேயே மூன்று தசாப்தங்களுக்கு மேல் மகத்தான கல்விப்பணியாற்றி எமது சிறார்களின் அறிவுப்பசியை போக்கும் பிரபல கணித ஆசான்

**திரு.த.வரதராஜா**
B.Ed Sp.Trd.(Maths), S.L.T.S I

அவர்களை மனதார பாராட்டுவதுடன் நான்கு தசாப்தங்களை கடந்தும் அவர் சேவை நீடிக்க வாழ்த்துகின்றோம்.

நா.கிருஷ்ணதாசனும், நண்பர்களும்.
G.P.S. றோட் கல்வியங்காடு.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பில் இன்று இடம்பெறும் தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு விழாவில் "கல்வி மாணி" பட்டம் பெறும் கல்விப்பணியில் அரியதோர் சாதனை படைத்து எமது சிறார்களுக்கு கணித அறிவை துல்லியமாக ஊட்டியவரும் நானகாவது தசாப்தத்தை நோக்கி தொடரும் கல்விச்சேவையாளரும் நிகரற்ற கணித ஆசானுமாகிய

**திரு.த.வரதராஜா**
B.Ed Sp.Trd.(Maths), S.L.T.S I

அவர்களை இந்நேரத்தில் பாராட்டுவதுடன், அவரது கல்விச்சேவை மென்மேலும் சிறப்புற அமையவாழ்த்துகின்றோம்.

லயன் அ.சற்குணநாதன் குடும்பத்தினர்,
செல்வன்ஸ் டீசல் எஞ்சினியேஸ் கோப்பாய்

## 31 ஆம் நாள் இதய அஞ்சலி



அமரர்
**வி.சுப்பிரமணியம்**

"மாநிலத்தை விட்டு
மறைந்தாயோ
மணித்தாத்தா"

வினோபா பாலர் பகல் பராமரிப்பு இல்லம்
வினோபா நகர், கச்சாய்.

துயருறும்:
நண்பர் குழாம்.
(79941)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எம்முடன் 18 ★ 02 ★ 1978



இறைவனுடன் 19 ★ 10 ★ 2008

**திருமதி சியாமளா ரவிச்சந்திரன்**

18.11.2008

பூவொன்று மலர்ந்து
கனியமுன் கருகியதே....
நீண்டகால வாழ்வு வாழமுன்
காலனிடம் சென்றதே....
விண்ணுலகில் நீ அமைதிபெற
இறைவனை இறைஞ்சுகின்றோம்

மடத்தடி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.
(79907)

கணவர்,
அம்மா, அப்பா,
மற்றும் குடும்பத்தினர்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

தோற்றம் 13 ★ 08 ★ 1928



மறைவு 19 ★ 10 ★ 2008

**அமரர் இளையதம்பி கதிர்காமலிங்கம்**

(ஓய்வுபெற்ற பிறப்பு, இறப்பு மாவட்ட பதிவாளர், J.P )

உயர்திரு.இ.கதிர்காமலிங்கம் (J.P) அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் பிள்ளைகளுக்கும், மருமக்களுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் ஏனைய உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

"ஜீவபதி"
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
(79820)

திரு.ஏ.சீ.விஜயராசசிங்கம் (சகலன்),
(ஓய்வுபெற்ற முதன்மை ஆசிரியரும் சமாதான நீதிவானும்)
திருமதி விஜயராசசிங்கம் ஜீவமணி (மைத்துனி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசின் வாயைத் திறக்க வைக்கும் போர் விரைவில்

## 'வெற்றி முழக்கம்' வரும் வரை அனைவரும் ஒன்றாக குரல் கொடுக்கவேண்டும்; தா.பாண்டியன் அறிவிப்பு

சென்னை, நவ. 18

இலங்கை அரசைப் போர் நிறுத்தம் செய்யும்படி வற்புறுத்தாத - வாய் திறவாத மத்திய அரசை, வாய் திறக்க வைக்கும் போராட்டத்தை அறிவிக்க உள்ளோம் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கூறியுள்ளார்.

மேலும், ஈழத் தமிழர் பிரச்சினையில் வெற்றி முழக்கம் வரும் வரை அனைவரும் ஒற்றுமையுடன் நின்று குரல் கொடுக்க வேண்டும் - என்றும் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர் மீதான தாக்குதலைக் கண்டித்து நடிகர் விஜய், சென்னையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே பாண்டியன் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் பேசியவை வருமாறு-

கடந்த அரை நூற்றாண்டுகளாக தமிழ்ச் சகோதரர்கள் இலங்கை அரசுக்கு அடிபணிய மறுத்து போராடி வருகிறார்கள். அந்த மக்கள் இறுதி வெற்றி பெற வாழ்த்துக்கள்.

தமிழக அரசியல் கட்சிகள், கடந்த பல மாதங்களாக இலங்கையிடம் கூறி போரை நிறுத்தச் சொல்லுங்கள் என்று இந்திய அரசிடம் கேட்டு வருகின்றன.

மேலும், பிரதமரே உங்கள் வாயைத் திறந்து போரை நிறுத்த சொல்லுங்கள் என கேட்டோம். சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிக் கேட்டோம். பல போராட்டங்கள் நடத்தினோம்.

இருந்தும் இந்திய அரசு வாய் திறக்கவில்லை. அதற்காகத் தான் அனைவரின் சார்பில் 2000 மாணவர்களை யும், மாநிலம் முழுவதிலிருந்தும் 25 ஆயிரம் மாணவர்களையும் டில்லிக்கு அனுப்பி வைத்தோம்.

அங்கு சென்ற அவர்கள் 18 தேசிய மொழிகளிலும் போரை நிறுத்தச் சொல்லி குரல் எழுப்பினார்கள். இதற்கெல்லாம் வாய் திறவாத மத்திய அரசை வாய் திறக்க வைக்கும் போராட்டத்தை அறிவிக்க உள்ளோம். அதற்கும் வாய் திறக்கவில்லை என்றால் இந்த அரசு ஆட்சியில் நீடிக்கலாமா என முடிவு கட்ட வேண்டும்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் வெற்றி முழக்கம் வரும் வரை அனைவரும் ஒற்றுமையுடன் நிற்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்காக உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் நடிகர் விஜய்யைப் பாராட்டுகிறேன். உங்களின் கோரிக்கையாவது மத்திய அரசின் காதில் விழுகிறதா என்பதைப் பார்ப்போம் - என்றார்.

விஜய் நடத்திய உண்ணாவிரதத்தின் போது..



# ஆயுத மோதல் தீர்வளிக்காது!

## வரதராஜன் பேச்சு

கோவில்பட்டி, நவ. 18

இலங்கைப் பிரச்சினைக்கு ஆயுத மோதல் தீர்வு அளிக்காது. போர் நிறுத்தம் செய்து அமைதிப் பேச்சு நடத்தி அதன் மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும். மத்திய அரசு இலங்கைக்கு ஆயுதம் கொடுக்கக் கூடாது - என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் என். வரதராஜன் கூறியுள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் அங்கு பேசியவை வருமாறு-

இலங்கைப் பிரச்சினை கடந்த 1983ஆம் ஆண்டு முதல் இருந்துவருகிறது. இதற்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. ஆயுத மோதல் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு அளிக்காது. போர் நிறுத்தம் செய்து அமைதிப் பேச்சு நடத்த வேண்டும்.

மத்திய அரசு இலங்கைக்கு ஆயுதம் கொடுக்கக் கூடாது. உணவு, உடை, மருந்து ஆகியவை இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பான முறையில் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் முறையாக கொடுத்து உதவ வேண்டும் - என்றார்.

# ஈழத் தமிழரின் விடுதலைப் போரை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்து



வேலூர், நவ.18

இலங்கை அரசு போரை நிறுத்தவில்லையெனில், ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிப்போம் என இந்தியா அறிவிக்க வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ச. ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வேலூரில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இதுகுறித்து மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு-

போரை நிறுத்த வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை மஹிந்த ராஜபக்ஷ, இந்தியாவுக்கே வந்து மறுத்துள்ளார். இங்கிருந்து சென்றதும் தாக்குதலை அதிகரித்துள்ளார்.

இந்நிலையில் இந்திய அரசு, இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டும். இல்லையெனில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிப்போம் என்று அறிவிக்க வேண்டும்.

குறைந்தபட்சம் மனிதாபிமான அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபைக்கு இவ்விடயத்தை எடுத்துச் சென்று, ஐ.நா தலையீட்டைக் கோரவேண்டும். இல்லையெனில் பிரச்சினை தீராது. பேச்சின் மூலம் அரசியல் தீர்வு காண இலங்கையை எச்சரிக்க வேண்டும்.

தற்போது இந்தியா, முக்கிய முடிவு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர்களை தீவிரவாதிகள் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. 52 லட்சம் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இது என்ற கருத்துக்கு இந்தியா வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் தீவிரவாதம் தலைதூக்கியுள்ளது. எங்கேயும் முப்படைத் தாக்குதல் நடைபெறவில்லை.

நம்நாட்டு மீனவர்கள் மீது இலங்கை இராணுவம் நடத்திய தாக்குதலில் சுமார் 500 பேர் இறந்துள்ளனர். இதை இந்தியா சகித்துக் கொள்வதுபோல் வேறு எந்த நாடும் சகித்துக் கொள்ளாது.

கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பா.ம.க. கலந்து கொள்ளும். முக்கியமான காலக் கட்டத்தில், சிக்கலான பிரச்சினையில் இந்திய அரசின் தலையீடு அவசியம் என்ற நிலையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மாநில அரசு கூட்ட வேண்டும். ஏற்கனவே மாநில அரசு கூட்டியதால்தான் மத்திய அரசு கொஞ்சம் செயற்படத் தொடங்கியது.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தை முதல்வர் கூட்டி மாற்று வழியைச் சிந்திக்க வேண்டும். சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளும் ஆதரித்துள்ள நிலையில் இந்தக் கூட்டம் கூட்டினால் சரியாக இருக்கும்.

இந்தியாவுக்கு எதிரி நாடுகளான சீனா, பாகிஸ்தான் ஆகியவை இலங்கைக்கு அதிக பட்ச ஆயுதங்களை அனுப்பி வருகின்றன. இதை அனுமதிக்க முடியாது. இது இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடு. இலங்கைத் தமிழர்களுக்கு தனிநாடு ஏற்பட்டால் இந்தியாவுக்கு நேசநாடாகத்தான் இருக்கும் - என்றார்.

# ஈழத் தமிழர் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்கின்றார் விஜய்

சென்னை, நவ. 18

இலங்கையில் நடைபெறும் போர் முடிவுக்கு வரவேண்டும். அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும். தமிழர்களின் தொடர் போராட்டங்களால் நிச்சயம் போர் நிறுத்தம் வரும் - என்று நடிகர் விஜய் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான போரை நிறுத்த வலியுறுத்தி நடிகர் விஜய் தனது ரசிகர்களுடன் சென்னையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய உண்ணாவிரதத்தில் பேசியபோதே இதனைக் கூறினார்.

அப்போது அவர் மேலும் பேசியவை வருமாறு-

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட உங்களுக்கெல்லாம் எப்படி நன்றி சொல்லுவது என்றே தெரியவில்லை. சென்னை மட்டுமில்லாமல் தமிழகம் முழுவதும் 37 நகரங்களில் இந்த உண்ணாவிரதம் நடைபெறுகிறது. அதை நினைக்கும்போது பெருமையாக இருக்கிறது. இலங்கையில் நடக்கின்ற பிரச்சினை பற்றி சிறிய வயதிலிருந்து கேள்விப்பட்டு வருகிறோம்.

பாடசாலை, கல்லூரிகளில் படிக்கும்போது பத்திரிகைகளில் படித்திருக்கிறோம். தொலைக்காட்சிகளில் செய்திகளைப் பார்க்கும்போது மனதுக்கு கஷ்டமாக இருக்கிறது. பிரச்சினை இல்லாத நாடே இல்லை. இந்தியாவுக்கும்,

## இந்தியச் செய்திகள்

பாகிஸ்தானுக்கும் பிரச்சினை; பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் பிரச்சினை; அமெரிக்காவுக்கும், வியட்நாமுக்கும் பிரச்சினை. இப்படி எல்லா நாடுகளுக்கும் பிரச்சினை இருக்கிறது. அந்தப் பிரச்சினை எல்லாம் யுத்தம் நடந்து முடிவுக்கு வந்தது.

ஆனால் 25 ஆண்டுகளாக நம் தமிழ் மக்கள் அகதிகளாக ஓடி வரும் பிரச்சினை இலங்கையில் மட்டும்தான் உள்ளது. மேலே விமானம் பறந்தால் இங்குள்ள சிறுவர் சிறுமியர்கள் சந்தோஷமாக 'டாட்டா' காட்டுகிறார்கள்.

ஆனால், இலங்கையில் விமானம் பறந்து போனால் அங்குள்ள சிறுவர், சிறுமியர்கள்



உட்பட சகலரும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ப[illegible]ங்குகுழிகளுக்குள் ஓடுகிறார்கள். நமது வீடுகளில் கல் விழுந்தால் யார் எறிந்தனர் என அதட்டிக் கேட்கிறோம். ஆனால் இலங்கையில் வீடுகளின் மீது குண்டு விழுகிறது. இதைக் கேட்பதற்கு யாருமே இல்லை.

இந்த உண்ணாவிரத போராட்டத்தில், எந்த அரசியலும் இல்லை. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக எங்கள் உணர்வை தெரிவிக்கும் போராட்டமே இது. இலங்கையில் நடைபெறும் போர் முடிவுக்கு வரவேண்டும். அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும்.

இதற்காக நாம் அங்கே போய் சண்டை போட முடியாது. இதுபோன்ற உண்ணாவிரத போராட்டம் மூலம் நம் உணர்வுகளைக் காட்ட முடியும்.

இலங்கையில் உள்ளவர்கள் மூன்று வேளை சாப்பிட்டு விட்டு தூங்க வேண்டும் என்பதற்காகத்தான் நாம் சாப்பிடாமல் இருக்கிறோம். திரைப்பட நடிகர்கள் போராட்டம், உண்ணாவிரதம், பெப்சி தொழிலாளர்கள் உண்ணாவிரதம், டி.வி. நடிகர்கள் உண்ணாவிரதம், அரசியல் கட்சிகளின் உண்ணாவிரதம் என எல்லாத் தமிழர்களும் போராடி வருகிறோம். நிச்சயம் போர் நிறுத்தம் வரும். தமிழர்களைக் கொல்வது நிறுத்தப்படும் - என்றார்.

நடிகர் விஜயின் தாய் ஷோபா, ஜூஸ் கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். அதனை அங்கிருந்த சிறுவனுக்கு கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார் விஜய்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், பேராசிரியர் சுப. வீரபாண்டியன், பெப்சி செயலாளர் உமா சங்கர், நடிகர்கள் மன்சூர் அலிகான், ஸ்ரீமன், விக்ராந்த், இயக்குநர்கள் வி.சி.குகநாதன், ரமணன், பேரரசு, ஜெயம் ராஜா ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

# மன்மோகனின் அக்கறையின்மையே மஹிந்தவின் பேச்சுக்குக் காரணம்!

## திருமாவளவன்

சென்னை, நவ.18

ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற விடயத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் போதிய அக்கறை காட்டவில்லை என்பதையே இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பேச்சு சுட்டிக்காட்டுகிறது என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சென்னை வேளச்சேரியில் உள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் 'தாய்மண்' அலுவலகத்தில் நேற்றுமுன்திம் ஞாயிற்றுக்கிழமை 'தமிழ் உயிர்' எனும் தலைப்பில் ஓவிய முகாம் நடைபெற்றது.

இதில் ஈழத் தமிழர்களின் சோகம், இலங்கை இராணுவத்தின் கொடுமைகள் ஆகிய கருப்பொருள்களில் தமிழகத்தின் முன்னணி ஓவியர்களான தட்சணாமூர்த்தி, மருது, புகழேந்தி, வீரசந்தானம், மனோகரன், சந்துரு, பாரதி கல்யாணி போன்ற ஓவியர்கள் கலந்து கொண்டு படங்களை வரைந்தனர்.

இந்த ஓவியங்கள் அடுத்த வாரம் தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

ஓவிய முகாமை தொல்.திருமாவளவன் தொடங்கி வைத்து உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் பேசியவை வருமாறு-

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த பிறகும் போர் நிறுத்தம் செய்ய முடியாது என்றும், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடைய வேண்டும் என்றும் பேசியுள்ளார்.

ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற விடயத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், போதிய அக்கறை காட்டவில்லை என்பதையே மஹிந்த ராஜபக்ஷவின் பேச்சு சுட்டிக்காட்டுகிறது. அங்கு போர் நிறுத்தம் செய்ய மஹிந்த ராஜபக்ஷவை வலியுறுத்த வேண்டும். மத்திய அரசுதான் இந்தப் பிரச்சினையில் தீர்வு காண முடியும்.

தமிழக முதலமைச்சர் தலைமையில் தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து கட்சித் தலைவர்களும் பிரதமரிடம் இதனை வலியுறுத்த வேண்டும். இந்திய அரசு இதனை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் கூடிய அனைத்து கட்சிக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை உடனே நடைமுறைப்படுத்த வேண்டும். அவசியம் ஏற்பட்டால் இந்திய [illegible] போர் தொடுக்க வேண்டும் - என்றார்.

# ஈழத் தமிழர் படுகொலைக்கு அனைத்து அமைப்புகளும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கண்டனம் தெரிவிக்க வேண்டும்

## ஐக்கிய ஜனதா தள மாணவர் அணி தீர்மானம்

சென்னை, நவ.18

இலங்கையில் அப்பாவி ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்பாக, தமிழகத்திலுள்ள அனைத்து அமைப்புகளும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கண்டனம் தெரிவிக்க வேண்டும் - என்று ஐக்கிய ஜனதா தளம் மாணவர் அணி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஐக்கிய ஜனதா தளத்தின் மாணவர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் நேற்றுமுன்தினம் சென்னையிலுள்ள அதன் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தேசிய மாணவர் அணிச் செயலாளர் செங்கை ஆனந்தன் தலைமை வகித்தார். மாநில மாணவர் அணி தலைவர் [illegible]புருஷோத்தமன் முன்னிலை வகித்தார்.

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்து வரும் இலங்கை அரசை வன்மையாகக் கண்டித்தும் இது சம்பந்தமாகப் போராடி வரும் அனைத்துத் தமிழகக் கட்சிகளுக்கு நன்றி தெரிவித்து கொள்வதுடன், இந்தியாவில் உள்ள அனைத்து மாநில அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நிலவுக்கு விண்கலம் அனுப்பிய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்தும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ராஜீவ்காந்தி வீதியில் 50 கிலோமீற்றருக்குட்பட்ட கிராமங்களுக்கு இலவச ச[illegible] வழங்குதல், மத்திய அமைச்சர் டாக்டர் அன்மணி ராமதாஸுக்கு நன்றி தெரிவித்தல் உட்பட 7 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாம் மாத நினைவஞ்சலியும் 79 ஆவது பிறந்த நாள் நினைவும்



தாயின் மடியில்
18.11.1929

ஆண்டவன் அடியில்
29.05.2008

### திருமதி நித்தியலெட்சுமி இலட்சுமணர்
(ஓட்டுமடம்)

29.05.2008 இல் இறைபதமடைந்த, இன்று (18.11.2008) 79அகவையை எய்தும் எங்கள் அன்புத் தெய்வத்தை நாளும் நினைத்துருகும் நாம் இந்நாளில் நெஞ்சுருக அஞ்சலித்து ஆராதிக்கின்றோம்.

இல.7 ஐயனார்கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம் (79956)

மக்கள் (ஆனந்ததேவி, ஓங்காரமூர்த்தி, புவனேந்திரன், விஜயேந்திரன் பற்குணதேவி), மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவியாளர்
திரு.செல்வராசா ரமேஸ்
அவர்களின் பாசமிகு சகோதரன்

### திரு.செல்வராசா சதீஸ்
(சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்)

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள். (சி/55536) உள்ளூராட்சி உதவியாளர்கள்.

## மரண அறிவித்தல்

### ஜோசப் மாகிறேற்



பாஷையூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் மாகிறேற் 13.11.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிஜோசப்பின் (அந்தோனி பொன்னுத்துரை) அன்பு மனைவியும், மரியாம்பிள்ளை மிசியா, தவநாதன் ஸ்ரெலா, கணேஸ், சுகுமார், சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.11.2008) புதன் கிழமை பி.ப 3மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டபின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.2, புது வீதி,
பாஷையூர்.

தகவல்:
பிள்ளைகள்.

## பயணிகள் கப்பல் சேவை இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், நவ. 18

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை வழமைபோல் இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறும் என்று அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

கப்பலில் நேற்றுப் பயணம் செய்வதற்காக செயலகத்தில் பயண அனுமதிப்பத்திரம் பெற்றவர்களும் அவசரதேவை நிமித்தம் பயணம் மேற்கொள்ள இருப்பவர்களும் இன்று யாழ்.ரயில் நிலையத்தில் சமுகமளித்து பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும் அரச அதிபர் அறிவித்துள்ளார். (1)

## புதிய நீதிவான்கள் நேற்று பதவியேற்பு

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்.மாவட்ட நீதிமன்றங்களுக்கு புதிய நீதிவான்கள் மூவர் நேற்று பதவியேற்றுள்ளனர்.

யாழ்.மேலதிக நீதிவானாகவும் ஊர்காவற்றுறை நீதிவானாகவும் ஏ.ஏ.ஆனந்தராஜாவும், மல்லாகம் நீதிவானாக எஸ்.பிரபாகரனும், பருத்தித்துறை, சாவகச்சேரி மேலதிக நீதிவானாக அந்தோனிப்பிள்ளை யூட்சனும்-

நேற்று பதவி ஏற்றுள்ளனர்.

யாழ்.மேலதிக நீதிவானாகவும் ஊர்காவற்துரை நீதிவானாகவும் பணியாற்றிய திருமதி ஜோய் மகாதேவன் மன்னார் நீதிவானாக இடமாற்றம் பெற்றுச் செல்கிறார். (1)

## கண்டெடுக்கப்பட்ட ஆபரணம் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்.போதனா வைத்தியசாலையின் வளாகத்தினுள் ஓர் பொன்னிறமான ஆபரணமொன்று கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொலைத்தோர் அல்லது உரித்துடையோர் உரிய ஆதாரம் காட்டி யாழ்போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)


IIS CITY CAMPUS

BIT - 3rd Semester
விரிவுரைகள் ஆரம்பம்

2ம் வருட மாணவர்களுக்கான (3ஆம் அரையாண்டு) விரிவுரைகள் 22.11.2008 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

தகுதியான மாணவர்கள் 22.11.2008க்கு முன் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

- இயக்குநர்

IIS CITY CAMPUS
# 200, Sivanpannai Road,Jaffna.
Tel : 021 222 8060


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்திராவதி பத்மநாதன்
(இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்)



கரம்பனைப் பிறப்பிடமாகவும் சீரணி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திராவதி பத்மநாதன் 15.11.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பத்மநாதன் (இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் கரம்பன் கிழக்கு காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னபிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும் அமரர் பரிமளபாக்கியம் மற்றும் வித்தியாவதி (ஓய்வு பெற்ற ஆசிரியை, சைவ மங்கையர் கழகம், கொழும்பு), அமரர் அம்பிகாவதி மற்றும் இந்திராவதி (ஓய்வு பெற்ற லிகிதர், யா/இந்து மகளிர் கல்லூரி), திலகவதி (ஓய்வு பெற்ற மருந்தாளர், கொழும்பு), பாலேந்திரன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை), மகேந்திரன் (வர்த்தகர், திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு சகோதரியும் அமரர் பத்மநாதன் மற்றும் செல்லத்துரை (ஓய்வு பெற்ற பாட்டா நிறுவன உத்தியோகத்தர், கொழும்பு), காங்கேசு (கனடா), அமரர் நித்தியானந்தன் (யா/ மாநகர சபை உத்தியோகத்தர்) மற்றும் கருணாகரன் (ஓய்வுபெற்ற சிறாப்பர், சுங்க திணைக்களம்), சறோஜினிதேவி (ஆசிரியை, பம்பலப் பிட்டி இந்துக் கல்லூரி), சரஸ்வதிதேவி (திருநெல்வேலி) மற்றும் பத்மசுந்தரி (ஓய்வு பெற்ற ஆசிரியை), பத்மநேசன் (ஓய்வுபெற்ற S.L.T), பத்மரஞ்சினி, திலகவதி பத்மதேவன், பத்மஜோதி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் S.L.T), பத்மானந்தன் (U.K) ஆகியோரின் மைத்துனியும் சிவகுருநாதன் (ஓய்வுபெற்ற படவரைஞர், யாழ்.மாநகரசபை), ஜெகதீஸ்வரி, குகதாசன் (ஓய்வுபெற்ற பொலீஸ் பரிசோதகர்), சேனாதிபதி (U.K), நாகராஜேஸ்வரி (உடுவில்), சிவநேசன் (ஓய்வு பெற்ற அன்ரி மலேரியா உத்தியோகத்தர்), புஸ்பா (U.K) ஆகியோரின் சகலியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீரணி சந்தி, சண்டிலிப்பாய்.
T.P. 060 221 6975

தகவல்:
கோ.பத்மநாதன் (கணவர்).

### கமலாம்பிகை குமாரவேலு



அரியாலை, 39, வைரவர் கோயில் வீதியை பிறப்பிடமாகவும் 131/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பிகை குமாரவேலு (16.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா குமாரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் கலாராணி (கிளி), ஜெயவரதராஜா (வரதன், லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சதாசிவம், வசந்தமாலா (வவா, லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் செல்லத்துரை, ஞானலட்சுமி, காலஞ்சென்ற ராசலிங்கம், யோகம்மா, தர்மலிங்கம், துரைசிங்கம், காலஞ்சென்ற குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகம்மா, காலஞ்சென்ற துரைராசா, சரஸ்வதிப்பிள்ளை, கணேசபிள்ளை, தியாகேஸ்வரி, இராஜேஸ்வரி, சற்குணவதி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற பாக்கியலட்சுமி, சிவராஜா, செல்வமணி, காலஞ்சென்ற இரத்தினசிங்கம் கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் சறோஜினிதேவி, காலஞ்சென்ற செல்வராசா, தங்கராணி, கதிரேசு, தவமணி கனகரத்தினம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், திவாகரதாசன் (முகவர், ஜனசக்தி இன்சூரன்ஸ் கம்பனி, யாழ்ப்பாணம்) கஜந்தினி, நிசாந்தினி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை 2009 வர்த்தகப் பிரிவு), சாருண்யா (லண்டன்), இலக்கியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2008) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

131/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கலாராணி (மகள்),
ஜெயவரதராஜா (வரதன்-மகன், லண்டன்).


DMI இன் கணினிக் கற்கைநெறிகள்

DMI கல்வி நிறுவனமானது, அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகளுக்கு விசேட கட்டணச்சலுகையை வழங்குகின்றது.

Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Diploma in Computerized Accounting
Dip. in Pre-Press Desktop Publishing
Dip. in Video Production & Multimedia



Tally கணக்கீட்டு மென்பொருள்கற்கைநெறி
GIT (A/L) ,ICT சிறார்களுக்கான பயிற்சி நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 19/11/2008 - 22/11/2008 10.00 am 3.00 pm

DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.


## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்:- 14.08.1914
மறைவு :- 22.11.2005
திதி:- சஷ்டி

அமரர்
குழந்தையர் செல்லத்துரை



தோற்றம்:- 16.05.1924
மறைவு :- 06.08.2005

அமரர்
நல்லம்மா செல்லத்துரை

ஆண்டுகள் மூன்று கடந்தாலும்
என்றும் உங்களை மறவோம்.

...சந்தி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரகுவை புலிகள் கொல்லவில்லையா? பிள்ளையான் மீது பிரதமர் பாய்ச்சல்!

கொழும்பு,நவ.18

பிள்ளையானின் பிரத்தியேகச் செயலாளர் ரகுவை விடுதலைப் புலிகள் கொலை செய்யவில்லை என்று பிள்ளையான் தெரிவித்தமைக்காக அவர் மீது சீற்றத்துடன் பாய்ந்திருக்கின்றார் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க.

''பிள்ளையானின் செயலாளர் ரகுவின் கொலை தொடர்பான விசாரணை அறிக்கை கிடைக்கும் முன் இக்கொலையைப் புலிகள் செய்யவில்லை என்று முதலமைச்சர் பிள்ளையானால் எப்படிக் கூறமுடியும்?'' - என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க நேற்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

நேற்றைய வரவு- செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கு முதலமைச்சர் பிள்ளையானின் பிரத்தியேக செயலாளர் ரகுவின் கொலை தொடர்பாக விசாரணை நடத்தப் பொலிஸாரும் சி.ஐ.டியினரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் விசாரணை அறிக்கைகள் வரும்வரை நாம் காத்திருக்கிறோம். அது வரைக்கும் இந்தக் கொலை தொடர்பில் எம்மால் எந்தக்கருத்தும் கூற முடியாது.

அப்படியிருக்கும்போது இந்தக்கொலையைப் புலிகள் செய்யவில்லை என்று முதலமைச்சர் பிள்ளையானால் எப்படிக் கூற முடியும்?

எப்படி இருப்பினும் நாம் சட்டத்தின் படியே செயற்பட வேண்டும். இக்கொலை தொடர்பாக எம்மால் இப்போதைக்குக் கருத்துக் கூறமுடியாது. நாம் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். - என்றார். (அ-சி)

## குமுழமுனையும் படை வசமாம்!

மணலாறு,நாயாறு கடல் நீரேரிக்கு வடமேற்கே உள்ள குமுழமுனையில், மீன்பிடிக்கிராமம் ஒன்றை நேற்றுக் காலை படையினர் தமது வசம் கொண்டுவந்தனர் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

படைத்தரப்பின் 59ஆவது டிவிஷன் கடந்த இரு நாள்களாகத் தொடர்ந்து மேற்கொண்ட மோதலை அடுத்தே அப்பகுதி மீட்கப்பட்டது என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது. ''இம்மோதலின் போது விடுதலைப் புலிகளின் பல பதுங்குகுழிகள் அழிக்கப்பட்டன. அப்பகுதியில் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் வாகனம் மீது நடத்திய அதிரடித் தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர் கொல்லப்பட்டதுடன் அவருடைய சடலமும் மீட்கப்பட்டது. அத்துடன ரி - 56 ரகத் துப்பாக்கி, ஆர்.பி.ஜி. என்பனவும் மீட்கப்பட்டன'' என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது. (அ-சி)

# மஹிந்தவின் ஆலோசகரை சந்தித்துவிட்டு திரும்பியபோதே ரகு கொல்லப்பட்டாராம்

## ஆதனால் ஐ.தே.கட்சிக்கு சந்தேகம்

கொழும்பு, நவ. 18

கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானின் பிரத்தியேக செயலாளர் ரகு, ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவரைச் சந்தித்துவிட்டு திரும்பும்போதுதான் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று எதிர்க்கட்சிப் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நேற்றைய வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானின் பிரத்தியேகச் செயலாளர் ரகுவும் அவரது வாகனச் சாரதியும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் முதலமைச்சர் பிள்ளையான் சந்தேகம் வெ[illegible]ட்டுள்ளார்.

இக்கொலையைப் புலிகள் செய்யவில்லை என்று பிள்ளையான் பகிரங்கமாகவே கூறியுள்ளார். இக்கொலையாளிகளைக் கண்டு பிடிப்பதன் மூலமே கிழக்கில் நல்லதொரு நிலைமையைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தக் கொலை தொடர்பில் பிள்ளையான் பாரிய சந்தேகம் வெளியிட்டுள்ளார் என்பது இதன் மூலம் தெரிகிறது.

இந்தக் கொலை தொடர்பாக பல்வேறுபட்ட தகவல்கள் வெளியாகின்றன. ஜனாதிபதி ஆலோசகர் ஒருவரைச் சந்தித்து விட்டுத் திரும்பும்போது தான் ரகுவும் அவரது சாரதியும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதுவும் வீதித் தடைக்கு அருகில் வைத்துத்தான் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர். இது தொடர்பாக நாம் ஆழமாக யோசிக்கவேண்டியுள்ளது.(அ-சி)

# வவுணதீவு நாவற்காட்டுப் பகுதியில் சிங்கள வைத்தியர் சுட்டுக் கொலை

## அதிரடிப்படையின் வேட்டில் தமிழ்ப் பொதுமகன் பலி

மட்டக்களப்பு, நவ. 18

மட்டக்களப்பு, வவுணதீவு நாவற்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சிங்கள வைத்தியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அதற்கு சிறிது நேரத்துக்குப் பின்னர் அங்குவந்த விசேட அதிரடிப்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

நாவற்காடு வைத்தியசாலையில் பணியாற்றும் எஸ்.டபிள்யூ பலித பத்மகுமார (வயது - 35), என்ற வைத்தியரே சுட்டுக் கொல்லப்பட்டார். ரி.யோகேந்திரன்(வயது-38) என்ற குடும்பஸ்தரே அதிரடிப்படையினரின் துப்பாக்கி சூட்டில் பலியானார்.

வைத்தியசாலைக்குள் புகுந்த ஆயுததாரிகள் வைத்தியர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. வைத்தியர் சுடப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மட்டக்களப்பு வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் சிற்றூழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். இதில் நூற்றுக்கணக்கான வைத்திய ஊழியர்கள் கலந்துகொண்டனர் என்று கூறப்பட்டது. (அ-சி)

# மக்கள் பணத்தை கொள்ளையடிக்கும் பட்ஜெட்; 121 கோடி ரூபா ஜனாதிபதியின் செலவுக்கு!

கொழும்பு, நவ. 18

2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பல முக்கிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து, அவற்றிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட நிதியான 121 கோடி ரூபா பணத்தை ஜனாதிபதி தமது செலவுக்கு ஒதுக்கியுள்ளார் என்று ஜே.வி.பி. நேற்று நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டியது

நேற்றைய வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் எம்.பி. காமினி ரட்ணாயக்கவே இத்தகவலைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இந்த வரவு - செலவுத்திட்டம் மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக்குடிக்கும் ஒட்டுண்ணியாகவே அமைந்துள்ளது. இதனால் மக்களுக்கு எந்தப் பிரயோசனமுமில்லை.

அனைத்துக்கும் வரிகள் அதிகரிக்கப்பட்டு மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கும் திட்டமே இந்த வரவு - செலவுத் திட்டம்.

### மக்களின் பணத்தை கொள்ளையடிக்கும் வரவு - செலவுத் திட்டம்

2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஏற்பட்டிருக்கும் நிதிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இந்நாட்டுப் பிரஜைகள் ஒவ்வொருவரும் 16 ஆயிரத்து 500 ரூபாவை அரசுக்குச் செலுத்தவேண்டியுள்ளது.

யுத்தத்தைக் கொண்டு நடத்தத் தியாகம் செய்யுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துவிட்டு அரசு மட்டும் சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருகிறது.

முக்கிய அமைச்சுகளுக்கான நிதிகள் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் குறைக்கப்பட்டுள்ளன. குறைக்கப்பட்ட நிதி ஜனாதிபதியின் செலவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்படி 121 கோடி ரூபா இவ்வாறு வெட்டியெடுக்கப்பட்டு ஜனாதிபதியின் செலவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. - என்றார். (அ-சி)

# கேதவத்தை கிராமத்துச் மின் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.18

கைதடி மேற்கு கேதவத்தை கிரா[illegible]திற்கு மின்சார விநியோகம் அண்மை[illegible] வழங்கப்பட்டுள்ளது.

இக் கிராமத்திற்கு முதன்முறையா[illegible] மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (1-207)

# தாதியர் பயிற்சிக்கு ஆயிரம் யுவதிகள்

தேசிய பயிலுநர் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி அதிகார சபையின் கீழ் தாதியர் பயிற்சிக்காக ஆயிரம் யுவதிகள் நாளை புதன்கிழமை சேர்த் துக்கொள்ளப்படவுள்ளதாகத் தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொழில் மற்றும் தொழில்நுட்ப அமைச்சும் சுகாதார அமைச்சும் ஒருங்கிணைந்து இந்தத் திட்டத்தை மேற்கொள்கின்றது.

இது தொடர்பான அங்குரார்ப்பண வைபவம் நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

சுகாதார மற்றும் போஷாக்குத் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சர் பியசேன கமகே ஆகிய இருவரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (50)

# வடக்குக் களமுனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னநகர்வை மேற்கொண்டன. அதற்கு எதிராக விடுதலைப் புலிகளின் கொமாண்டோ அணியினர் மேற்கொண்ட முறியடிப்புச் சமரில் 20 இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் 80 பேர் படுகாயமடைந்தனர். இச்சமர் சுமார் 6 மணித்தியாலங்கள் நீடித்தது. பின்னர் அரச படைகள் பின்வாங்கிச் சென்றன'' என்று புலிகள் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

''கடந்த சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் முகமாலை, கிளாலி, கண்டல் பகுதிகளில் விமானப் படையினரின் ஜெற் விமானங்கள் மற்றும் கடும் பிற்களச் சூட்டாதரவுகளுடன் அரச படைகள் முன்நகர்வை மேற்கொண்டன. அதற்கு விடுதலைப் புலிகள் மதியம் 12.10.மணிவரை தொடுத்த முறியடிப்புச் சமரில் 18 இராணுவத்தினர் உயிரிழக்க 24 பேர்வரை காயமடைந்த நிலையில் அரச படைகள் பழைய நிலைகளுக்குத் திரும்பிச் சென்றன'' என்றும் புலிகள் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் முகமாலை, கிளாலி, நாகர்கோவில் பகுதிகளில் தமது 53,55 ஆவது படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மோதல்கள் இடம்பெற்றன என்றும், இம் மோதலில் விடுதலைப் புலிகளின் மண் அணைகள் பல அழிக்கப்பட்டன என்றும், இதில் விடுதலைப் புலிகளுக்குப் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் படைத்தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

வடக்கு முன்னரங்க கள முனைகளில் நேற்றும் இருதரப்புக்கும் இடையே கடுஞ்சமர் நடந்து கொண்டிருந்ததாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. எனினும், இதன்போது ஏற்பட்ட இழப்பு விவரங்களை நேற்றுமாலை வரை பெறமுடிய வில்லை. (அ-சி)

# தமிழரின் அபிலாசைகளை அறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சம்பந்தன் இது தொடர்பாக தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் சிங்களவர்களே 75 வீதமாக உள்ளனர் என்பதால் சிங்களவர்களுக்கே இந்நாடு சொந்தம் என்று இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவினரும் இதே கருத்தையே தெரிவித்துள்ளனர். இந்த நிலையின் கீழ் சிறுபான்மையினரின் பிரச்சினையை எப்படித் தீர்க்கமுடியும்?

இந்த யுத்தத்தைக்கூட சரத் பொன்சேகாதான் தீர்மானிக்கிறார். ஜனாதிபதி இதுபற்றித் தீர்மானமெடுப்பதில்லை.

புலிகள் அழித்தொழிக்கப்பட்டதன் பின்புதான் அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என்று அரசு கூறுகின்றது. புலிகள் ஒழிக்கப்பட்டதன் பின் அரசுக்கு எவரும் அழுத்தம் கொடுக்கமாட்டார் கள் என்று கருதியே அரசு இவ்வாறு கூறுகின்றது.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்கும் உண்மையான திட்டம் எதுவும் அரசிடமில்லை. தமிழர்களை அடக்கி ஒடுக்குவதே அரசின் ஒரே திட்டம்.

துணைப்படைகளைத் தன்னோடு வைத்துக் கொண்டு தமிழர்கள் மீது குண்டுபோட்டு அவர்களைக் கொல்லும் செயற்பாட்டில்தான் அரசு ஈடுபட்டு வருகிறது.

தமிழருக்கு அரசியல் தீர்வு தேவையில்லை என்று சர்வதேசத்திற்குக் காட்டவே அரசு முற்படுகிறது.

எமது பாரம்பரிய இடங்களில் உள்ள எமது மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும்.

அம்மக்களுக்கு என்ன தேவை, அவர்களின் அபிலாஷைகள் என்ன என்பதை அறிய சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் வடக்கு - கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும்.

அப்போதுதான் தமிழர்களின் உண்மையான தேவை என்ன என்பதை சர்வதேச சமூகம் விளங்கிக்கொள்ளும். நாமும் அந்த மக்களின் ஆணையை [illegible] செயற்படுவோம். - என்றார். (அ -சி)

# மரண அறிவித்தல்

## கந்தையா நடராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)



சூளானை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வரியப்புலம், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா 16.11.2008 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு-கண்ணாத்தை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சின்னம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம்,ஆச்சிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும், தபேந்திரன் (கனடா), கலாநிதி, அருள்ராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரூபவதி (கனடா), காலஞ்சென்ற மனமோகன், சுஜா (கனடா) ஆகியோரின் மாமனாரும், லக்ஸ்மன், அனோஜன், நிதுஷனா, அபிவர்ஷனி, பிரியங்கன், குகாங்கன், கஜப்பிரியன், வட்சலாஜினி, நிஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வரியப்புலம்,*
*சுன்னாகம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் நல்ல பாடம் கற்றுக்கொள்ள அரச படைகள் கிளிநொச்சியையும் கைப்பற்றுவர்

### அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகிறார்.

கண்டி, நவ.18

பூநகரியை கைப்பற்றிய அரச படைகள் விரைவில் கிளிநொச்சியையும் கைப்பற்றுவர். புலிகளுக்கு விளங்கும் மொழியிலேயே நாம் செயற்படவேண்டியுள்ளது. அது யுத்தத்தில் அவர்களை தோல்வி அடையச் செய்வதாகும். அதனையே அரசு இப்போது முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாட்டு நலன்புரி அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

இலங்கை முதலீட்டுச் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் ஓர் அங்கமான கண்டி நகரின் மத்தியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் 270 கடைத் தொகுதிகளைக் கொண்ட ஐந்து மாடிகளில் அமைந்த ''கண்டி சிற்றி சென்ரர்'' என்ற வர்த்தகமையத்தை நேற்றுமுன்தினம் பார்வையிட்ட அமைச்சர் அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போதே இதனைத் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

30 வருடங்களுக்கு முன்னர் வடக்கு - கிழக்கு பிரச்சினைகள் தொடர்பில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும்நோக்கில் கூட்டப்பட்ட வட்டமேசை மாநாட்டின் மூலமும் புலிகளுக்கு பயன் பெறமுடியாமல் போய்விட்டது.

எனவேதான்,இன்று அரசு புலிகளுக்கு விளங்கக்கூடிய - அவர்களது மொழி ஊடாகவே அவர்களைத் தோற்கடிக்க முயற்சி எடுத்துள்ளது. அதன் பிரதிபலிப்பாக பூநகரியும் கைப்பற்றப்பட்டுவிட்டது. இதன் மூலம் விரைவில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு நாடு துரித அபிவிருத்தியடையும்.

இன்று பூநகரியைக் கைப்பற்றிய அரச படையினர் விரைவில் கிளிநொச்சியையும் கைப்பற்றுவர். புலிகள் நல்லதொரு பாடத்தைக் கற்றுக்கொள்ளும் வகையில் படையினரின் நடவடிக்கை அமையப்போகின்றது.

நாட்டில் சமாதானத்தைத் தோற்றுவிக்க இரண்டு வழிகள் உண்டு. ஒன்று, பண்பட்ட முறையில் வட்டமேசை முன் தோன்றி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிப்பது; மற்றொன்று போரில் தோல்வி காணச் செய்வது:

புலிகளுக்கு விளங்கும் மொழியிலேயே நாம் நடக்கவேண்டியுள்ளது. அது யுத்தத்தில் அவர்களைத் தோல்வியடையச் செய்வதாகும். அதைத்தான் அரசு இப்பொழுது முன்னெடுத்து வருகின்றது.

இன்று எந்தவொரு சக்திக்கும் அடி பணியாமல், தேசிய நலனைக் கருத்திற் கொண்டு நாட்டைக் காக்கும் பணியில் ஜனாதிபதி இயங்கி வருகிறார். நிச்சயமாக எதிர்காலத்தில் காத்திரமான அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதியின் வேலைத் திட்டங்களும் அவரது உறுதிப்பாடுகளும் வழிவகுக்கும் - என்றார் அவர்.

சுமார் 5000 பேருக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் 800 கோடி ரூபா நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்த நிலையத்தின் வேலைத்திட்டங்களையும் அமைச்சர் பார்வையிட்டார்.

அமைச்சர்களான சரத் அமுனுகம, சுசில் பிரேம் ஜயந்த, பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா, மத்திய மாகாண முதல மைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டிருந்தனர். (அ-சி)

## திருமலை பாலையூற்றில் இளைஞன் சுட்டுக் கொலை

திருகோணமலை, நவ. 18

திருகோணமலை, பாலையூற்று கணேச வீதியில் வைத்து நேற்றுமுன்தினம் பிற்பகல் 6 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த புலேந்திரன் சாந்தன் (வயது 20) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

## ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக சிங்கப்பூரில் கவனஈர்ப்பு




இலங்கையில் போர் காரணமாக ஈழத்தமிழர் படும் அவலங்கள் நிறுத்தப்பட வேண்டும், அமைதிவழித் தீர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என சிங்கப்பூர் சரித்திரத்திலேயே முதன் முறையாக காந்திய வழியில் ஈழத்தமிழருக்காக அமைதி வேண்டி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்டபடம்.

# ரெலோ உறுப்பினர்கள் இருவர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

வவுனியா, நவ. 18

வவுனியா குருமன்காடு, காளிகோவில் வீதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ரெலோ இயக்கத்தின் மாற்றுக்குழு உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என்று கூறப்படுகிறது.

அன்றையதினம் இரவு காளி கோவிலுக்கு அருகில் உள்ள காணி ஒன்றில் புதிய முகாம் ஒன்றை அமைப்பதற்கான பணியில் ஈடுபட்டிருந்த சமயமே அவர்கள் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் காயமடைந்த நால்வர் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் இருவர் வைத்தியசாலையில் உயிரிழந்தனர் என்று கூறப்பட்டது.

ஒட்டோ ஒன்றிலும் மோட்டார் சைக்கிளிலும் வந்த ஆயுததாரிகளே இத்தாக்குதலை நடத்தினர் என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் இரசாலி பிரதீப் (வயது - 29), பரா என அழைக்கப்படும் சிவகுமார் (வயது - 31) ஆகியோரே கொல்லப்பட்டனர். இளஞ்செழியன் (வயது - 27), நிர்மலன் (வயது - 18) ஆகியோரே படுகாயமடைந்தனர். அவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு நேற்றுச் சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் அலெக்ஸ்ராஜா விசாரணை மேற்கொண்டார். அங்கு காணப்பட்ட தடயப் பொருள்களைப் பார்வையிட்ட அவர் மேலதிக விசாரணைகளைத் துரிதப்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.


## விற்பனையாகிறது

வருகிற ஞாயிற்றுக்கிழமை (23.11.2008)
நடைபெற விருக்கும்
தேர்தல் திணைக்கள முகாமைத்துவ
உதவியாளர்களுக்கான
**போட்டிப் பரீட்சை**
கை நூல்
(மொழி ஆற்றல், உளச்சார்பு)
**P.உமாசங்கர்**

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


### விரு.சிறுத்தைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் பகல் 2 மணியளவில் சென்னை மன்றோ சிலையில் இருந்து சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லம் வரை நடைபெறவுள்ள இப்பேரணியை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தொடக்கி வைக்க, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் முடித்து வைக்கின்றார்.

இதில் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் உரையாற்றுகின்றார்.

### பூநகரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதே வேளை-

யாழ்.மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களில் மற்றும் படை முகாங்களில் சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

யாழ்.நகரில் சேவையில் ஈடுபட்ட தனியார் மினிபஸ்கள், ஆட்டோக்கள், போக்குவரத்து சபை பஸ்கள் ஆகியவற்றிலும் சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

பூநகரியை படையினர் தம்வசமாக்கியதை கொண்டாடுவதற்கான வெற்றி விழாவாரம் தென்னிலங்கையில் நேற்று ஆரம்ப மானது குறிப்பிடத்தக்கது.

(அ-86-302-131)

### தமிழகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நேற்று நடத்திய அனைத்துக் கட்சிக்கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. 25ஆம் திகதி தமிழக மக்கள் அனைவரும் தமது அன்றாட கருமங்களை நிறுத்தி ஈழத் தமிழருக்கு ஆதரவு தருவிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருக் கிறது.

கடந்த வாரமும் இதேபோன்றதொரு கடையடைப்பு ஈழத்தமிழருக்காகத் தமிழகத்தில் நடத்தப்பட்மை தெரிந்ததே.

(அ-சி)

### பரந்தனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஆட்லறித் தாக்குதலினால் அந்தப் பகுதியில் உள்ள சில மக்கள் குடிமனைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆகியன சேதமடைந்தன என்றும்,பரந்தன் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஷெல்கள் வீழ்ந்ததால் மாணவர்கள் நாலாபுறமும் சிதறிஓடினர் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை, கிளிநொச்சி, உருத்திரபுரம் வீதியில் உள்ள விவசாய நிலங்கள் மீதும் நேற்றுஅதிகாலை 2 மணியிலிருந்து 5.30 மணிவரை இராணுவத்தினர் கடும் ஆட்லறித் தாக்குதலை நடத்தினர் என்று பிறிதொரு செய்தி வெளிவந்தது.

(அ-சி)

### மாங்குளத்தையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைப்பிரிவொன்று திங்கட் கிழமை காலை' மாங்குளத்திற்குள் நுழைந்துள்ளது. அவர்கள் அப்பகுதியில் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளுடனான கடும் மோதலின் பின்னர் ஏ-9 பிரதான வீதி ஊடான மாங்குளம் பிரதேசத்தை படையினர் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்த அவர், மாங்குளம் கைப்பற்றப்பட்டமையினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு செல்லும் வீதி துண்டாடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மாங்குளம் கைப்பற்றப்பட்டதனால் புலிகளுக்கான வழங்கல் பாதை தடைப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரம்புக் வெல மேலும் தெரிவித்தார். (அ-1)

### இராணுவத் தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வருடத்தால் நீடிக்கப்படும்.

இவர் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 06 ஆம் திகதி இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இவரது தலைமைத்துவ வழிகாட்டலில் இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான படை நடவடிக்கைகளில் பாரிய வெற்றிகளை ஈட்டியது.

2006 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மாவிலாறில் இவர் தொடங்கிய மனிதாபிமான படை நடவடிக்கை காரணமாக கிழக்கு மாகாணம் முழுவதும் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டது.

இப்போது வடக்கில் சிலாவத்துறை, பூநகரி, மற்றும் மாங்குளம் ஆகிய பிரதேசங்கள் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன - என்று பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்திருக்கிறது. (அ-சி)

### விடுதலைப்புலிகளை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டைப் பிரிக்க முயல்பவர்களுக்கோ மோதல் களை ஏற்படுத்திய வர்களுக்கோ சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. இத்தகையோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்காது.

விடுதலைப் புலிகள் தற்சமயம் போர் செய்யும் மன நிலையில் இல்லை. விரைவில் கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்கள் படையினர் வசமாகி விடும்: இப் படிப் பிரதமர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (அ-1)

### விடுதலைப் புலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் மேற்கொண்ட பல வெற்றிகரமான முன்னேற்றங்களின் காரணமாகத்தான் இந்த வெற்றியை அவர்கள் பெற்றிருக்கின்றனர்.

இதன் மூலம் அவர்கள் யாழ். குடாநாட்டுக்கான முக்கிய பாதை ஒன்றைத் திறக்க முடியும். அதனைவிட பூநகரியை இராணுவம் கைப்பற்றியதால், அந்தப் பிராந்தியத்தின் மேற்குக் கரைப்பகுதி முற்றிலுமாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின்கீழ் வந்திருக்கிறது.

இதன் மூலம் மன்னார் குடாவிலும் பாக்குநீரிணையிலும் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் முற்றிலுமாக கட்டுப்படுத்தப்படும். தமிழ்நாட்டிலிருந்து விடுதலைப் புலிகளுக்கு சிறுசிறு வெடி பொருள்கள் கொண்டுவரப்படுவதும் தடைப்படும்.

#### விடுதலைப் புலிகளிடம் இருந்து எதிர்ப்பு

இதனைவிட இன்று (அதாவது நேற்று) மாங்குளத்தையும் தாங்கள் கைப்பற்றியிருப்பதாக இராணுவம் அறிவித்துள்ளது. மாங்குளத்தைப் பொறுத் தவரை ஏ - 9 வீதியில் அமைந்திருப்பதுதான் முக்கியமானதாகும். இருப்பினும் தற்போதைய இராணுவ இலக்கு கிளிநொச் சியைப் பிடிப்பதாகும். அந்த விடயத்தைப் பொறுத் தவரையில் புலிகளிடமிருந்து எதிர்ப்பு வந்துகொண்டுதான் இருக்கிறது - என்றார்.

விடுதலைப் புலிகள் தொடர்ந்து பின் வாங்குவதில் ஏதாவது தந்தரோபாயம் இருக்கிறதாக நீங்கள் ஏதும் நினைக்கிறீர்களா எனக் கேட்டதற்கு -

'கொஞ்சம் வெளிப்படையாகவே சொல்ல வேண்டுமேயானால், இந்த நிலைமை குறித்து இப்பொழுதே கூறுவது கடினமாகும். விடுதலைப் புலிகளைக் குறைத்து மதிப்பிட்டு, அவர்கள் தமது இராணுவ பலத்தை இழந்துவிட்டார்கள் என்று கூறுவது முற்றிலும் தவறு. ஆனால், பூநகரியைப் புலிகள் இழந்ததில் அவர்கள் பின்னடைவை எதிர்கொள்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

நவம்பர் 27 ஆம்திகதி விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் வரவிருக்கின்ற நிலையில் இந்தப் பின்னடைவு மேலும் முக்கியமானதாகும்.

அத்துடன், மாங்குளமும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டிருப்பதால் புலிகள் மீது மேலும் இராணுவ அழுத்தம் அதிகரிக்கும். இந்த நிகழ்வுகளால் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய தாக்கம் என்ன என்பதை இப்போதே எதிர்வுகூறுவது கடினமாகும்.

ஒருபுறம் புலிகளின் கடற்படையின் பலம் இன்னமும் குறையாமல் அப்படியே இருக்கிறது. மறுபுறம் மிகவும் அப்படை வசதிகளை மாத்திரம் கொண்ட அவர்களின் வான்படையும் கொஞ்சம் அப்படியே கட்டுக்குலையாமல்தான் இருக்கிறது. இந்த நிலைமையில் இந்த நிகழ்வுகள் எவ்வாறு இருக்கப்போகின்றன என்பது தெளிவாகவில்லை - என்று மேலும் அவர் கூறினார். (அ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org